Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16

விலை ரூ. 50

சுடர் : 38
: 254

திங்கட்கிழமை 07 ஓகஸ்ட் 2023

ஆடி 22 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054



இன்று யாழ். பல்கலையில் தமிழியல் மாநாடு ஆரம்பம்

# தமிழன்னைக்குப் பெருமைசேர்க்க தாயகத்திலுள்ளோர் அணிதிரள்க!

## தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 7
சங்ககாலத்தில் இடையறாத போர், அழிவு என்பவற்றால் உருக்குலைந்து, துவண்டிருந்த தமிழ் மக்களுக்கு சங் கமருவியகால அற இலக்கியங்கள் ஒரு உள ஆற்றுப்படுத்தலை வழங்கி, மீண்டும் தமிழ்ச் சமூகம் மீண்டெழ வழிவகுத்தன. ஏறக்குறைய அதே நிலையில்தான் இப்போதும் தமிழ்ச் சமூகம் தாழ்வுற்று, வறுமை விஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நிற்கின்றது. இத்தகைய »15

# மனிதக் கடத்தல் வடக்கில் தீவிரம்

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் பலப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு

**கொழும்பு, ஓகஸ்ட் 7**

**மருத்துவ விசா மற்றும் மனித கடத்தல்காரர்களால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கடவுச்சீட்டில் நாட்டைவிட்டு வெளியேற முற்பட்ட பெண் ஒருவர் உள்ளிட்ட ஏழு பேர் கடந்த வாரம் விசாரணைகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கொழும்பு ஆங்கில வார ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.** »15

## விகாரைக்கு எதிர்ப்பு

திருமலை, ஒக. 7
குச்சவெளி பிரதேச செயலர் பிரிவின் பெரியகுளம் கிராமத்தின் உச்சிப் பிள்ளையார் மலை பகுதியில் தொல்லியல் திணைக்களத்தின் ஆதரவுடன் கட்டப்படும் விகாரைக்கு எதிராகப் »16

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துக

கொழும்பு, ஒக. 7
தற்போது நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக மின்சார விநியோகத்துக்கான தேவை கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் நுகர்வோர் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன் . »16

## தென்னையிலிருந்து வீழ்ந்தவர் சாவு!

கிளிநொச்சி, ஒக. 7
முழங்காவிலில் தேங்காய் பிடுங்குவதற்கு தென்னை மரத்தில் ஏறிய குடும்பத் தலைவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் முழங்காவில் கடற் »16

## பாடசாலைகளில் இனி ஆண்டுக்கு ஒரு பரீட்சை

### வருகிறது புதிய நடைமுறை

கொழும்பு, ஒக. 7
அடுத்த ஆண்டு முதல் பாடசாலை தவணைப் பரீட்சைகளைக் குறைத்து ஆண்டுக்கு ஒரு பரீட்சையை மாத்திரம் நடத்தவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். »15

சீதுவவில்

## விமான எதிர்ப்பு குண்டுகள் மீட்பு!

கரும்புலிகள் புதைத்தவையா?

கொழும்பு, ஒக. 7
நீர்கொழும்பு, சீதுவ லியனகெமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள 8 ஏக்கர் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் »15

## சாரதியின் தூக்கம் பெண் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஒக. 7
சாவகச்சேரி மருத்துவமனைக்குச் செல்வதற்கு வீதியில் பேருந்துக்கு பெண்ணொருவர் காத்திருந்தபோது, கார் ஒன்று மோதி மரம் »15



## காற்றாலைகளின் சத்தத்தால் தூக்கத்தைத் தொலைக்கிறோம்

### காஞ்சனவுக்கு மன்னாரில் எதிர்ப்பு

மன்னார், ஒக. 7
காற்றாலைகளால் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்று உறுதியளித்தமைக்கு மாறாக எமக்குப் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன எனத் தெரிவித்து »15

## உடவளவ விவசாயிகளுக்காக வடக்கில் ஒலிக்கும் குரல்கள்

கிளிநொச்சி, ஒக. 7
உடவளவை விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாத அமைச்சர்கள் உடனே பதவி துறக்கவேண்டும் - இவ்வாறு இரணைமடு »15

**ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு மாபெரும் ரூ. 10.4 பில்லியன் போனஸ் கொடுப்பனவு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் வரலாற்று சாதனை படைத்துள்ளது**

•காப்புறுதித் துறை வரலாற்றில் முதன் முறையாக ஆயுள் காப்புறுதி போனஸ் கொடுப்பனவாக ரூ. 10.4 பில்லியன் தொகையை தாண்டியுள்ளது.

2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட திரண்ட ரூ. 92.8 பில்லியன் பெறுமதி என்பதில் அதியுயர் ஆயுள் காப்புறுதி போனஸ் கொடுப்பனவுத் தொகை வழங்கப்பட்ட ஆண்டாக அமைந்துள்ளது.

தேசத்தின் காப்புறுதியாளரான ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் (SLIC), தனது காப்புறுதிதாரர்களுக்கு துறையின் மாபெரும் போனஸ் கொடுப்பனவுத் தொகையான ரூ. 10 பில்லியனை 2022 ஆம் ஆண்டுக்காக பிரகடனம் செய்துள்ளது.
2006 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் ஆயுள் காப்புறுதி போனஸ் கொடுப்பனவாக ரூ. 92.8 பில்லியன் எனும் உயர்ந்த தொகையை வழங்கியுள்ளது.



ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் தலைவர் - ஜனாதிபதி சட்டத்தரணி. ரொனால்ட் சி. பெரேரா

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்தன எல். அளுத்கம

நாட்டின் மாபெரும் ஆயுள் காப்புறுதி போனஸ் கொடுப்பனவு உறுதியான காப்புறுதி சேவைகள் வழங்குநர் எனும் காப்புறுதிதாரர்களின் நம்பிக்கையை ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் மேலும் உறுதி செய்துள்ளது. சவால்கள் நிறைந்த சந்தைச் சூழ்நிலை நிலவிய

**தொடர்ச்சி - 9 ஆம் பக்கம்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி முன்னெடுப்பது தமிழரை ஏமாற்றும் நாடகம்



## துணைநிற்கோம் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக. 7

**தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான நாடகத்தை நிறுத்திவிட்டு 13ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தவேண்டும். இந்த முரண்பாட்டை பகிரங்கப்படுத்தினாலே நாம் எமது பரிந்துரைகளை முன்வைக்கமுடியும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

13 ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமான பரிந்துரைகளையும், முன்மொழிவுகளையும் முன்வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கை தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவே சர்வகட்சி கூட்டத்தை மையப்படுத்திய நாடகத்தை முன்னெடுத்துள்ளார். இதற்கு நாம் துணைபோக முடியாது. 13 ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனைகளை அவர் தற்போது கோருகின்றார். தேர்தலை மையப்படுத்தியே அவர் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறார். கடன்மறுசீரமைப்பு, நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தல் போன்ற விவகாரங்களில் அரசாங்கமே தீர்மானம் எடுத்தது. எதிர்க்கட்சிகளின் கருத்துக்களைக் கோரவில்லை. இந்த விடயத்தில் மாத்திரம் எதற்காக எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டை அரசாங்கம் கோருகின்றது. 13 ஆவது திருத்தம் சம்பந்தமாக அரசாங்கம் தனது இறுதியான நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துகின்றபோது அதுசம்பந்தமான பரிந்துரைகளை செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ச-இ)

# 'ஒன்லைன்' முறைமையில் உள்ளூராட்சி மன்றங்கள்!

கொழும்பு, ஓக. 7

மக்கள் எந்தவித அசௌகரியமும் இன்றி தமது கடமைகளை மேற்கொள்ளும் வகையில் புதிய வேலைத்திட்டமாக அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இணையத்தளத்தில் பணம் செலுத்தும் முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 69 உள்ளூராட்சி நிறுவனங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது ஒன்லைன் முறையின் ஊடாக உள்ளூராட்சி நிறுவனங்களில் வரிகளைச் செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நிர்மாணத் துறைக்குத் தேவையான அனுமதிகளை ஒன்லைன் முறையின்கீழ் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மக்கள் எந்தவித அசௌகரியமும் இன்றி தமது கடமைகளை மேற்கொள்ளும் நோக்கில் இந்தப் புதிய வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# மாகாணத்தேர்தலை நடத்துமாறு ஒன்றிணைந்து வலியுறுத்துங்கள்

## எதிர்க்கட்சிக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் கலாநிதி தயான் ஜயதிலக்க அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 7

மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமாக நிபந்தனைகளை விதிப்பதை விடுத்து நடைமுறைச் சாத்தியமான விடயமான ஆண்டு இறுதிக்குள் மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துமாறு ஏகோபித்து அரசாங்கத்தை வலியுறுத்துவதே பொருத்தமான நடைமுறையாகும். இல்லாவிடின் 13 ஆவது திருத்தத்தின் உள்ளீடுகளை இழக்கும் நிலைமைகளே உருவாகும் என்று கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நீண்ட வரலாற்றைக் கொண்ட தேசியப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கடந்தகால ஜனாதிபதிகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள்.

ஆனால், அவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டதாக இல்லை. இவ்வாறானதொரு சூழலிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தச்சட்டத்தை கையிலெடுத்துள்ளார். அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வருடமாகும். 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கைகளை எடுப்பாராக இருந்தால் தென்னிலங்கையில் கொதிநிலை ஏற்படும். இந்தவிடயத்தில் ஜனாதிபதி ரணில் தனது வாக்குவங்கியைத் தக்கவைப்பதில் கவனத்தைக் கொண்டிருப்பார்.

இந்தக் காலப்பகுதிகளில் பிரதானமான விடயங்களை முன்நகர்த்துவதும் நடைமுறை சாத்தியமாக்குவதும் மிகவும் கடினமான விடயமாகும். அந்தவகையில் மாகாணங்களுக்குரிய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்குரிய வழியை முதலில் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த ஆண்டு இறுதிக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள், தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து அழுத்தங்களைப் பிரயோகித்து அதில் வெற்றியடைவதே பொருத்தமான அணுகுமுறையாகும் - என்றார். (ச-இ)

# 2000 விரிவுரையாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறினர்

## "வரி விதிப்புகள் அதிகரித்தமையும் ஒரு காரணம்"

கொழும்பு, ஓக. 7

சுமார் 2 ஆயிரம் விரிவுரையாளர்கள் இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்தவரும் பேராசிரியருமான பரண ஜயவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் 11 ஆயிரத்து 900 விரிவுரையாளர்கள் இருக்க வேண்டும். ஆனால், 6 ஆயிரத்து 600 பேர் மட்டுமே உள்ளனர் என்றார். பெரும்பாலான விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி நாடு திரும்பவில்லை.


அவர்களில் பெரும்பாலானோர் சேவையை விட்டு வெளியேறியுள்ளனர்.

2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஆனால், விரிவுரையாளர்கள் புதிதாக நியமிக்கப்படவில்லை. விரிவுரையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியமைக்கு வரி விதிப்புகள் அதிகரித்தமையும் ஒரு காரணம். அரசாங்கத்துடன் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற பேச்சின்போது, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்று தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால், எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை - என்றார். (ம)

# இ.போ.ச சாரதிகளின் தவறுகளை கண்டறிய புதிய செயலி



சாரதிகள் செய்யும் தவறுகளைக் கண்டறிவதற்காக விசேட செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

அதன்மூலம் சாரதிகள் செய்யும் தவறுகளை நேரடியாகப் பயணிகள் முறைப்பாடாக முன்வைக்கமுடியும் என விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை - சாரதிகள் செய்யும் தவறுகளை ஆவணப்படுத்தும் வகையில் சாரதியின் சோதனைப் புத்தகத்தை அறிமுகப்படுத்தவும் இலங்கை போக்குவரத்துச்சபை தீர்மானித்துள்ளது. (ச-இ)

# கப்பல் கட்டுமானத்துக்கு உதவுகின்றது பிரான்ஸ்!

கொழும்பு, ஓக. 7

கப்பல் கட்டுமானத் துறையை மேம்படுத்துவதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் இலங்கைக்கு வழங்கவுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் உறுதியளித்துள்ளார்.

மக்ரோனின் இலங்கைக்கான பயணத்தின்போது இருதரப்பு உறவுகள் குறித்து முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்களை அடுத்தே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

கப்பல் கட்டுமானத் துறையில் உலகில் மூன்றாவது இடத்தில் பிரான்ஸ் உள்ளது.

இலங்கை ஒரு தீவு நாடென்ற வகையில் கப்பல் கட்டுமானத்துறையை அபிவிருத்தி செய்வதன் ஊடாக பொருளாதார ரீதியில் நன்மைகள் கிடைக்கப்பெறும்.

எனவே, இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்புகள் குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக் குழுவிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே பிரான்ஸ் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. (ம)

# அரசின் உள்நோக்கம் 13 தொடர்பில் என்ன?

## ஐ.ம.சக்தி கேள்வி

கொழும்பு, ஓக. 7

13ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் எந்தவிதமான இறுதியான நிலைப்பாட்டிலுள்ளது என்பதை அறிந்தே எமது தரப்பு யோசனையை முன்வைக்க முடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவிக்கையில்;

13 ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக அரசியல் கட்சிகள் தமது பரிந்துரைகளையும் முன்மொழிவுகளையும் முன்வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளார்.

13 ஆவது திருத்த விடயத்தில் மட்டும் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் யோசனைகளைப் பெறுவதற்கு முனைவது வழமைக்கு மாறானதொரு விடயமாகும்.

இந்த விடயத்தில் அரசாங்கம் எவ்விதமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்தவேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கம் தனது யோசனைகளை முன்வைக்கின்ற பட்சத்தில் அது தொடர்பில் நாம் எமது நிலைப்பாடுகளையும் முன்மொழிவுகளையும் வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை இளைஞர்களால் கஞ்சா கடத்தல் முறியடிப்பு!

- 227 கிலோ கஞ்ச... பு
- சந்தேகநபரும் சிக்... ர்



**யாழ்ப்பாணம், ஓக. 7**

**யாழ்ப்பாணம் - பொன்னாலை பகுதியில் இளைஞர்கள் இணை... கஞ்சா கடத்தலை முறியடித்துள்ளனர். இளைஞர்கள் துணிகரமாக நடத்திய இந்தச் சுற்றிவளைப்பில் 227 கிலோ கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. சந்தேகநபர் ஒருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.**

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
பொன்னாலைப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பட்டாரக வாகனம் ஒன்று நிற்பதை இளைஞர்கள் சிலர் அவதானித்துள்ளனர்.
இதுதொடர்பில் வேறுசில இளைஞர்களுக்கும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மிகவும் கனகச்சிதமாக இளைஞர்கள் பட்டா ரக வாகனத்தைச் சுற்றிவளைத்துள்ளனர்.
வாகனத்தில் இருந்த சிலர் தப்பிச் சென்ற நிலையில், வாகனச் சாரதியொருவர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அத்துடன் பட்டா வாகனத்தில் பெரும் தொகைக் கஞ்சாவும் இருந்துள்ளது.
இதுதொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்த இடத்துக்குப் பொலிஸார் விரைந்துள்ளனர்.
பொலிஸாரிடம் சந்தேகநபர் பாரப்படுத்தப்பட்டதுடன், சான்றுப்பொருள்களும் ஒப்படைக்கப்பட்டன.
இளைஞர்களின் இந்தத் துணிகர நடவடிக்கைக்கும், முன்மாதிரியான செயற்பாட்டுக்கும் பொலிஸாரும் பொதுமக்களும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இளைஞர்கள் சட்டத்தைக் கையிலெடுக்காமல், இதுபோன்ற ஒத்துழைப்புகளை வழங்கினால் குற்றங்களை மேலும் குறைக்கலாம் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-26,27,125)



## சின்ன வெங்காயம் விலையில் வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஓக. 7
வெங்காய அறுவடை ஆரம்பமாகியுள்ளதை அடுத்து சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை சரிந்துள்ளது.
வலிகாமம் கிழக்கு, தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் மேற்கு, தீவுப்பகுதி போன்ற இடங்களில் பரவலாக சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டது.
தற்போது சின்ன வெங்காயச் செய்கைக்கான அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்பட்ட புதிய வெங்காயம் தற்போது சந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்தநிலையில் சின்ன வெங்காயத்தின் விலை அரைவாசியாகக் குறைவடைந்துள்ளது. (ச-17)

## இரு வாள்களுடன் சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 7
இரண்டு வாள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கோண்டாவிலில் கைதுசெய்யப்பட்டுள்ளாரென கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு நேற்று முன்தினம் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய கோண்டாவில் புகையிரத நிலைய வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து வாள்கள் மீட்கப்பட்டதுடன், வாளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 33 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில், ஐயப்ப விரதத்தைக் கடைப்பிடித்து வருவதால் பூசை வழிபாடுகளுக்கு குறித்த வாள்களைப் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.
சந்தேகநபருக்கெதிராக வழக்குப் பதிவுசெய்து யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

## வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 7
வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
சுன்னாகம் ஐயனார் கோவில் பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர், புலம்பெயர் மக்களின் நிதி உதவியில் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார்.
இந்த நிலையில் குறித்த பெண் தலைமைத்துவக் குடும்பத்தின் அயல் வீட்டுக்காரர் குழாய்க் கிணறு அமைத்ததால் தன்னுடைய வீட்டுக் கிணறு பாதிப்படைகின்றது எனத் தெரிவித்து பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் மீது கடும் தாக்குதலை நடத்தியுள்ளார்.
தாக்குதலில் காயமடைந்த அவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-125)





நெடுகப் பிரச்சினையளைப் பற்றியே கதைச்சுக் கொண்டிருந்தால் உங்களுக்கும் அலுப்படிக்கும் தானே. அதால இண்டைக்கு ஒரு மாறுதலுக்காக வேற ஒரு விசயத்தைப் பற்றிக் கதைப்பம்.

ஒருகாலத்தில இந்தியாவையே கலக்கின வீரப்பனைப் பற்றின ஆவணப் படமொண்டு 'நெட்பிளிக்ஸில' வந்திருக்கு. உங்களில சிலர் அதைப்பார்த்துமிருப்பியள். பார்க்காதவை ஒருக்கா பாக்கிறது நல்லது. அதில வீரப்பனைப் பற்றி இதுவரைக்கும் தெரியாத கனக்க விசயங்களைப் பற்றி ஆதாரத்தோட சொல்லுப்பட்டிருக்குது. வீரப்பன் எண்டால் பெரிய மீசையோட, காட்டுக்குள்ள துவக்கோட நிண்டு, சந்தன மரங்களை வெட்டி விக்கிற ஒரு கடத்தல்காரனாத்தான் கனபேருக்குத் தெரியும். ஆனால் வீரப்பன் ஏன் அப்பிடியொரு வாழ்க்கைக்கு போனான், அதுக்கு அவன் குடுத்த விலை, பொலிஸ் செய்த அட்டூழியங்கள், பொலிஸ் போட்ட திட்டங்களை வீரப்பன் முறியடிச்ச விதம், காட்டுக்கும், அங்க இருந்த சனத்துக்கும் அவன் எப்பிடி கடவுளா மாறினான். எண்டெல்லாம் விலாவாரியா இந்தப் படம் சொல்லுது.

படத்தில முக்கியமான ஒரு தகவல், வீரப்பன் கொலை செய்யப்பட்ட விதம் தான். அவனைப் பிடிக்க ஏலாத பொலிஸ் துரோகத்தால தான் அவனை விழுத்தியிருக்கு. வீரப்பனுக்கு விடுதலைப்புலிகள் எண்டால் கடும் விருப்பம். அதாலை விடுதலைப் புலிகள் எண்டு தாங்களே ஒராளை செட் பண்ணி பொலிஸ் வீரப்பனிட்ட அனுப்பி இருக்குது. போன உளவாளியும் இயக்கம் மாதிரி நடிச்சு, வீரப்பனுக்கு துவக்கெல்லாம் குடுத்து, தான் புலிப்போராளி எண்டு நம்ப வைச்சிட்டான். ஒருகட்டத்தில வீரப்பனுக்கு கண்ணில 'கற்றாக்' வந்து பார்வை மங்கிப் போட்டுது. ஒப்பிரேசன் செய்யாட்டி பார்வை முழுக்கப் போடும். அந்த நேரத்தில இயக்கம் மாதிரி நடிச்ச உளவாளி 'தமிழீழத்துக்குப் போனால் ஒப்பிரேசன் செய்யலாம்' எண்டு ஆசை காட்டுறான். அதுக்கு வீரப்பன் 'சரி, அப்ப ஒப்பிரேசன் செய்து போட்டு கடைசி வரை அங்கேயே இருக்க ஏற்பாடு செய். புலிகளின்ர நாட்டில வாழவேணும். என்ர கடைசி ஆசை இது தான்' எண்டுறான். பொலிஸ் அனுப்பின அம்புலன்ஸை இயக்கம் அனுப்பினதெண்டு நினைச்சு ஏறின வீரப்பனை, பொலிஸ் சுட்டுக் கொண்டது. அப்பிடி அந்த அம்புலன்ஸில வீரப்பன் வராட்டி அவனை பொலிஸ் பிடிச்சிருக்கவே ஏலாது.

எப்பிடி எங்கட இயக்கத்தை சதி செய்து இந்தியாவும், இலங்கையும் உலக நாடுகளோட கூட்டுச் சேர்ந்து அழிச்சாங்களோ, அதேமாதிரி வீரப்பனையும் புலிகள் எண்டு சொல்லிப் பொறி வைச்சு துரோகத்தால அழிச்சிருக்கிறாங்கள். தன்ர சொந்த நாட்டை விடவும் தமிழீழத்தில, புலிகளின்ர இடத்தில பாதுகாப்பா இருக்கலாம் எண்டு இந்தியாவையே கலங்கடிச்ச வீரப்பன் நினைக்கிற அளவுக்கு, எங்கட தேசம் ஒருகாலத்தில இருந்திருக்கு எண்டதும் பெருமைதானே.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வெப்பம் உக்கிரம்: குழந்தைகள் அவதானம்

*குழந்தைகள் மருத்துவ நிபுணர் அருள்மொழி அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், ஓக. 7
வடக்கு மாகாணத்தில் தற்போது வழமையைவிடவும் வெப்பநிலை அதிகரித்துள்ள நிலையில் குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் உடல் ஆரோக்கியம் தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குழந்தைகள் மருத்துவ நிபுணர் மருத்துவக் கலாநிதி கே.அருள்மொழி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை நிலவுகிறது. குறித்த காலப்பகுதியில் குழந்தைகள் சிறுவர்களுக்கு அதிக வியர்வை ஏற்படுவதுடன் உடலில் பருக்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. பருக்கள் ஏற்படும் போது உடலைச் சுத்தமாக வைத்திருக்காவிடின் கிருமித் தொற்றும் ஏற்படலாம். குழந்தைகளின் உடல் சுத்தத்தில் பெற்றோர் அதிக அக்கறை செலுத்தவேண்டும். வெப்பமான காலநிலையை எதிர்கொள்வதற்கு சுத்தமான நீரை அதிகம் பருகுவதுடன் கிருமிநாசினி பயன்படுத்தாத பழவகைகளை உண்பது சிறந்தது- என்றார். (ச- 27)



## இலங்கையில்

# யாழ். மாவட்டத்திலேயே வறட்சி உக்கிரம்

**கொழும்பு, ஓக. ... இலங்கையில் ... வறட்சியான காலநிலையால், யாழ்ப்பாணம் ... மே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்று என்று ... டர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையில் நிலவிவரும் வறட்சியான காலநிலை காரணமாக 4 மாவட்டங்களில் 90 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ, வடமேற்கு மாகாணங்களின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 747 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 983 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றுள்ளது. (ச-இ)

# வடக்கில் இன்று சீரான வானிலை



கொழும்பு, ஓக. 7
வடக்கு மாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சிறிதளவு மழை பெய்யக்கூடும். கிழக்கு மாகாணத்தில் ஒருசில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பகுதிகளில் விசேடமாக மழை இல்லாத வானிலையே காணப்படக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# இஞ்சி விலை யாழில் உயர்வு

யாழ்ப்பாணம், ஓக. 7
யாழ்.குடாநாட்டில் இஞ்சியின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

இஞ்சி கிலோ 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இஞ்சிச் செய்கை இந்த முறை குறைவடைந்தமையே அவற்றின் விலை அதிகரிப்புக்குக் காரணமென்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ச-17)

# வாட்டியெடுக்கும் வெயில் வெள்ளரி, இளநீருக்கு மவுசு



யாழ்ப்பாணம், ஓக. 7
யாழ்.குடாநாட்டில் வெள்ளரிப் பழம் மற்றும் செவ்விளநீர் போன்றவற்றின் விற்பனை சூடு பிடித்துள்ளது.

தற்போது நிலவும் கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக அவற்றின் நுகர்வு அதிகரித்துள்ளதென வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது. அதேவேளை தென்பகுதியிலிருந்தே செவ்விளநீர் கூடுதலாக யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துவரப்படுகின்றது. (ச-17)

## தண்ணீர் இருப்பிழப்பு எதிரொலி

# நீரின் பாவனை அதிகரித்தால் பாடசாலைகளிடமும் கட்டணம்



கொழும்பு, ஓக. 7
அங்கீகரிக்கப்பட்ட வரம்புக்கு மேல் நீரைப் பயன்படுத்தும் பாடசாலைகளிடமிருந்து கட்டணம் வசூலிக்க நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளதென சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்தார்.

1988ஆம் ஆண்டு முதல் அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளுக்கு இலவசமாக நீர் வழங்கப்படுகிறது.

பாடசாலைகளுக்கு மாதமொன்றுக்கு 4 இலட்சம் லீற்றர் நீரை இலவசமாகப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் நீர், பாடசாலைத் தேவைக்காக அன்றி வேறு விடயங்களுக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய அனுமதிக்கப்பட்டுள்ள வரம்பை விட அதிகளவில் நீரைப் பயன்படுத்தும் பாடசாலைகளிடமிருந்து மாத்திரம் கட்டணம் அறவிடப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது. [illegible]

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம்.

**சிம்மம்:** எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சுற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடவும் கூடுதல் கவனம் செலுத்தவும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# யாழ்ப்பாணம் ஒரு சைவத்தமிழ் பூமி!

யாழ்ப்பாணம் கந்தரோடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் லக்சுமி நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவுக்குப் பின்னைய ஆரம்ப காலங்களுக்கு உரித்தானவையாக அந்த நாணயங்கள் கருதப்படுகின்றன. நூற்றாண்டுக் கணக்கின்படி கி.பி. 1 முதல் கி.பி. 3 வரையிலான நூற்றாண்டுக்குட்பட்ட நாணயங்களே இவை. பாரம்பரிய சைவத்தமிழ் பூமியான யாழ்ப்பாணத்தில், தாமரைமலரில் பெண் தெய்வம் நிற்பதுபோன்றதான 'தமிழர்களுக்கே உரித்தான' வேலைப்பாட்டைக் கொண்ட 'லக்சுமி' நாணயம் மீட்கப்பட்டதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லைதான். ஆனால், இங்கே விடயம் என்னவெனில், நாணயம் மீட்கப்பட்ட பகுதி தொல்பொருள் பகுதியென்றும், அங்கு பௌத்த விகாரையே இருந்தது என்றும் தொல்பொருள் திணைக்களம் தொடர்ச்சியாக வலியுறுத்திய பின்னணியில், தொல்பொருள் திணைக்களத்துக்கும் அதன் 'பௌத்த பேரினவாத' நிகழ்ச்சித் திட்டத்துக்கும் விழுந்த சம்மட்டி அடிதான் இந்த நாணய மீட்பு.

தமிழர் தாயகத்தில் புராதன அழிப்பு நடவடிக்கையும், பாரம்பரிய சைவ அடையாளங்களுக்கு பௌத்த முலாமிட்டு பௌத்த - சிங்களத் திணிப்பும் அதற்கூடான மடைமாற்றமும் தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றமை பரம இரகசியம் அல்ல. இன்னும் சொல்லப்போனால் கந்தரோடையைவிடவும் பல மடங்கு வலிதான ஆக்கிரமிப்புகள் - அட்டூழியங்கள் தாயகத்தின் இதர பகுதிகளிலும் தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குருந்தூர் மலை, வெடுக்குநாறிமலை, கிழக்கில் எண்ணற்ற பகுதிகள் என்று நீளும் இந்தப் பட்டியலின் ஆகப்பிந்திய வரவுதான் பறாளாய் முருகன் ஆலயம். இவ்வாறிருக்கையில் இந்த ஆக்கிரமிப்பு மனோபாவத்தையும் அதன் பின்னரான உண்மைத் தன்மைகளையும் உலகத்துக்கு கனகச்சிதமாகக் கட்டியம் செய்திருக்கின்றன கந்தரோடையில் மீட்கப்பட்ட லக்சுமி நாணயங்கள். ஏற்கனவே 1917ஆம் ஆண்டும் இதே கந்தரோடையில் லக்சுமி நாணயங்கள் மீட்கப்பட்டிருந்தன. ஆனாலும் அதனை இருட்டடிப்புச் செய்துவிட்டு, அங்கு வெளித்தெரியும் விகாரை எச்சங்களை மட்டும் தூக்கிப் பிடிக்கிறது சிங்களப் பேரினவாத அரசு. வேடிக்கை என்னவெனில் அந்த விகாரைகளும், தமிழ் பௌத்தத்தின் வழிவந்தவை என்பதே.

உலகில் எந்தவொரு நாட்டிலும் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட லக்சுமி நாணயங்கள் போன்ற புராதனப் பொருள்கள் மீட்கப்பட்டால் அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொல்பொருள் திணைக்களத்திடம் முற்றுமுழுதாகப் பாரப்படுத்தப்படும். தொல்பொருள் திணைக்களம் விடயத்தைத் தன் முழுக்கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளும். அடுத்தகட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்மூலம் அந்தத் தொல்பொருள் மீட்கப்பட்ட பகுதியில் இருந்த பண்பாடுகள், கலைகள், கலாசாரங்கள், வர்த்தகத் தொடர்புகள், வாழ்க்கைமுறைகள், வழிபாட்டு முறைகள் என்பன பகிரங்கப்படுத்தப்படும். ஆனால், இலங்கையில் நிலைமை தலைகீழ். லக்சுமி நாணய மீட்பு விவகாரத்தையும் அதற்குப் பின்னரான உண்மைத்தன்மையையும் தொல்பொருள் திணைக்களத்திடமிருந்து பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டில்தான் நாமிருக்கின்றோம்.

தமிழர் தாயகத்தில் உச்சவேகத்தில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பௌத்தத் திணிப்புக்கு தடைபோடக்கூடிய ஒவ்வொரு விடயமும் இப்போது காலத்தேவையானவையும் தவிர்க்க முடியாதவையுமாகும். ஆதலால், லக்சுமி நாணய மீட்பையும், நாணயம் பிரதிபலிக்கும் மக்கள் கூட்டம், அவர்களின் வாழ்க்கைமுறை, வழிபாட்டுமுறை ஆகியவற்றையும் கம்பீரமாக நிலைநிறுத்தி அதன்மூலம் சிங்களப் பேரினவாதத்தின் கொடும்பற்களை எம்மிடத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாகவேனும் தூரவைக்க வேண்டியது தமிழர் தாயகத்தின் தலையாய பொறுப்பும் கடமையுமாகும்.

தொல்பொருள் திணைக்களத்தின் அறிவிப்புகளுக்கு எதிராக 'குழாயடிச் சண்டைகளில்' நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிராமல், இங்குள்ள தொல்பொருள்களுக்கு நியாயம் தேடுவதும் அங்கீகாரத்தைக் கண்டடைவதுமே இப்போதைக்கு நாம் செய்கின்ற ஆகப்பெரும் ஆக்கபூர்வமான செயலாக அமையும். ஆனால், அதற்கு எமக்குள் தமிழர் தலைமைகளுக்குள் தன்னார்வ அமைப்புகளுக்குள் பொதுப்பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும். பொதுப்பொறிமுறைக்கும் தமிழர் தலைமைகளுக்கும்தான் எட்டாப் பொருத்தமாயிற்றே. தமிழர் தாயகத்தில் மீட்கப்படும் ஒவ்வொரு தொல்பொருளும் தமிழர்களின் இருப்பு - தாயகத்தின் பாதுகாப்பு வாழ்வின் ஆதாரம் எம் எதிர்காலம், அவ்வளவே...!

## நாளொரு நல்வார்த்தை

உங்கள் முன்னே ஒன்பது முயல்கள் இருந்து அதில் ஒன்று உங்களுக்குத் தேவைப்பட்டால், ஒன்றைத் தெரிவுசெய்து முழுக்கவனத்துடன் அதை மட்டும் துரத்துங்கள் — ஜாக்மா —




# நியாயமற்ற முறையில் இலாபமீட்ட முடியாது!

## இலங்கை மின்சாரசபைக்கு பொதுப்பயன்பாடு ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 7

**நியாயமற்ற முறையில் இலாபமீட்ட இடமளிக்கமுடியாது என இலங்கை மின்சாரசபைக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சாரசபை விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

500 கிகாவாட் மணித்தியாலங்கள் மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் வேறு விநியோகஸ்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணத்துக்கான நிதியைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் எதிர்பார்க்கப்பட்டுள்ள 33 பில்லியன் ரூபா நட்டத்தை தவிர்த்தல் ஆகிய மூன்று காரணிகளே மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனையினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த அனைத்துக் காரணிகளையும் தரவுகளின் அடிப்படையில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிராகரித்துள்ளார். நியாயமற்ற முறையில் இலாபமீட்ட இடமளிப்பது தமது ஆணைக்குழுவின் பொறுப்பல்ல என்பதன் காரணமாக மின் கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்க முடியர்து என இலங்கை மின்சாரசபைக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம)

## மகப்பேற்றுக்குப் பின்னரான மனச்சோர்வுக்கு மாத்திரை!

கொழும்பு, ஓக. 7

மகப்பேற்றுக்கு பிறகான மனச்சோர்வுக்கான முதல் மாத்திரையை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது.

இலங்கை உட்பட உலகளாவிய நாடுகளில் இந்த நோய்க்கான நிவாரணியாக 'ஊசிக் கலாசாரமே' தற்போதுவரை நடைமுறையில் உள்ள நிலையில், தற்போது மாத்திரை அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தினசரி மாத்திரையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் தெரிவித்துள்ளது. மாத்திரை இந்த ஆண்டின் இறுதியில் சந்தைக்கு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## கெஹலியவுக்கு எதிரான

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றின் ஒழுங்குகளில்

கொழும்பு, ஓக. 7

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் கூடுதல் சேர்க்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான 45 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர். பல்வேறு எதிர்க்கட்சிகள் மற்றும் கூட்டணிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன. (ம)

நாளை 08.08.2023 செவ்வாய்க்கிழமை ஆடி 23

சுபநேரம் : 10.34 - 12.04

ராகுகாலம் : 03.04 - 04.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைது எதிர்பார்த்ததுதான் அமைதியாக இருங்கள்!

### இம்ரான் கோரிக்கை

இஸ்லாமபாத், ஓக. 7
பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் கைது எதிர் பார்க்கப்பட்ட விடயமே. ஆதலால் அமைதியாக இருங்கள் என்று இம்ரான்கான் தன் ஆதரவாளர் களைக் கோரியுள்ளார்.

வீடியோ ஒன்றில் தோன்றிய இம்ரான்கான் இது தொடர்பில் பேசியதாவது:-

எனது கைது எதிர்பார்க்கப்பட்டதுதான். நான் கைது செய்யப்படுவதற்கு முன்பு இந்தச் செய்தியை பதிவு செய்தேன். எனது கட்சியினர் அமைதியாகவும், உறுதியுடனும், வலிமையுடனும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்' - என்றுள்ளார். (ம)



## இம்ரான்கான் கைது:

# பாகிஸ்தானில் தீவிர பதற்றம்



**இஸ்லாமபாத், ஓக. 7**
**பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர் கைதாகியமையைக் கண்டித்து பாகிஸ்தானில் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களால் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.**

பாகிஸ்தான் தெஹ்ரீக். இன்சாப் கட்சியின் தலைவரும் பாகிஸ் தான் முன்னாள் பிரதமருமான இம்ரான் கானுக்கு ஊழல் வழக் கில் நேற்றுமுன்தினம் 3 ஆண்டு கள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது.

மேலும் 5 ஆண்டுகள் தகுதி நீக் கம், ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தும் பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிரதமராக இருந்த காலத்தில் வெளிநாட்டுத் தலைவர்கள் மற் றும் முக்கியமான பிரமுகர்கள் அவருக்கு வழங்கிய விலை உயர்ந்த பரிசுப் பொருள்கள் மற் றும் நினைவுப் பரிசுகளை கரு வூலத்தில் சேர்க்காமல் விற்பனை செய்து, அந்தப் பணத்தை மோசடி செய்ததாகத் தொடரப்பட்ட வழக் கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத்துடன் அவரை உடனடியாகக் கைது செய்யவும் நீதிமன்றம் உத் தரவு பிறப்பித்தது.

இதையடுத்து இம்ரான்கான் லாகூரில் வைத்துக் கைது செய் யப்பட்டார். இம்ரான்கான் கைது செய்யப்பட்டதையடுத்து அவரது ஆதரவாளர்கள் நாடெங்கிலும் போராட்டங்களை முன்னெடுத் துள் ளனர். லாகூர், ராவல்பிண்டி, கராச்சி உள்ளிட்ட பகுதிகளில் போராட்டங் கள் தீவிரம் பெற்றுள்ளன.

இது மோசமான நிலைமை என்று பாகிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிட் டுள்ளன. போராட்டங்களைக் கட் டுப்படுத்த பொலிஸார் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ம)

## உலகை உலுக்கிய ஹிரோஷிமா ஜப்பானில் 78 ஆவது நினைவு

டோக்கியோ, ஓக. 7
அமெரிக்காவின் அணுகுண்டுத் தாக்குதலின் 78 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று ஹிரோஷிமா நகரத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

அமெரிக்கா 'லிட்டில் பாய்' என்ற அணுகுண்டை முதன்முதலில் ஜப்பானின் ஹிரோஷிமா நகரம் மீது 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி காலை 8.15மணிக்கு வீசியது. அடுத்த மூன்றாவது நாள் நாகசாகியில் 'பேட் மன்' அணுகுண்டை வீசியது அமெரிக்கா. இரண்டாம் உலகப் போரின்போது இந் தக் கொடூரம் நடந்தது.

உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் எண்ணிக் கையை முறையாகக் கணக்கிட ஜப்பானுக்கு சில மாதங்கள் தேவைப்பட்டது.

ஹிரோஷிமாவில் மட்டும் 1.40 இலட்சம் மக்களின் உயிரைப் பறித்தது அணுகுண்டு. இரண்டாவது அணுகுண்டுத் தாக்குதலில் 74 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

அணுகுண்டு தாக்கத்தால் பயங்கரமாகப் பாதிக்கப்பட்ட ஜப்பான், இன்று மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர்ந்து முன்னேற்றம் கண்டுள்ளது. அனைத்திலும் அந்த நாடு புதுமையைக் கடைப்பிடித்தமையே அதற்குக் காரணம் என்றும் சொல்லப்படுகிறது. (ச-இ)

## இனிமேல் 'ஏ.ஐ.' சோதிடமும் சொல்லும்

வொஷிங்டன், ஓக. 7
இதுவரை இணையத்தில் ஜாதகம் கணித்துக்கொடுக்கவும் பொதுவான பலன்கள் சொல்லவும் மென்பொருள்கள் உள்ள நிலையில் கேட்கும் கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் சொல்லும் தொழில்நுட்பம் இல்லை. அதை 'ஏ.ஐ.' தொழில்நுட்பம் இனி சரிசெய்யும் எனத் தெரிவிக்கப்படு கிறது. எதிர்காலத்தை ஆளப்போகும் தொழில்நுட்பமான AI எனப்படும் செயற்கை நுண்ணறிவு மனிதர்களுக்குச் சவாலாக உருவெடுத்து வருகின்றது.

ஏ.ஐ.தொழில்நுட்பத்தின் வளர்ச்சி நாளுக்குநாள் அனைத் துத் துறைகளிலும் உச்சம் தொட்டுள்ள நிலையில் தற் போதைய புதிய வரவு 'ஏ.ஐ.' ஜோதிடம்.

தினமும் இராசிபலன் கேட்காமல் ஜோதிடப் பலன்கள் பார்க்காமல் பலருக்குப் பொழுது விடிவதில்லை.

அந்த வகையில் 'ஏ.ஐ.' தொழில்நுட்பம் ஜோதிடமும் இனி கூறவுள்ளது. உங்கள் பிறந்த நேரம், பிறந்த நாள் மற்றும் பிறந்த இடம் பற்றிய தகவலைக் கொடுத்தால் 'ஏ.ஐ.' உடனடியாக உங்கள் ஜாதகத்தைக் கணித்து விடுகிறது.

அதன்பின் உங்கள் எதிர்காலம் குறித்த எந்தக் கேள்வியை யும் நீங்கள் முன்வைக்கலாம். அதனையும் ஏ.ஐ. கணிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## நவால்னிக்கு கூடுதல் சிறை

மொஸ்கோ, ஓக. 7
ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னிக்கு 19 ஆண்டுகள் கூடுதல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஊழலுக்கு எதிரான தனது அறக்கட்டளை மூலமாகப் பணத்தை முறைகேடாகக் கையாடல் செய்ததாகக் கூறி 2013ஆம் ஆண்டு அலெக்ஸி மீது வழக்குத் தொட ரப்பட்டது.


இந்த வழக்கில் மொஸ்கோ நீதிமன்றம் கடந்த 2021ஆம் ஆண்டு அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. தொடர்ந்து மோசடி மற்றும் நீதிமன்ற அவமதிப்பு ஆகிய குற்றங்க ளுக்காக அலெக்ஸி நவால்னிக்கு 9 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து மொஸ்கோ நீதிமன்றம் கடந்த ஆண்டு உத்தரவிட்டது.

இந்த நிலையில் அவர் மீது பதிவு செய் யப்பட்ட பிற வழக்குகளான தீவிரவாதத் தைத் தூண்டுதல் மற்றும் நிதியளித்தல், சட்டவிரோத தன்னார்வத் தொண்டு நிறு வனத்தை உருவாக்குதல், நாஜிக் கொள் கைகளுக்குப் புத்துயிர் கொடுத்தல் மற் றும் ஆபத்தான செயல்களுக்கு குழந்தை களைத் தூண்டுதல் உள்ளிட்ட ஆறு பிரிவு களில் அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும் அவருக்கு கூடுதலாக 19 ஆண் டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள் ளது. இதன்மூலம் அவர் மொத்தம் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுப விக்கவேண்டும். (ம)

## இதயத்தை அனுப்பினால் சிறை

### சவூதி, குவைத்தில் புதிய சட்டம்



சமூக வலைத்தளங்களில் அறிமுக மில்லாத பெண்களுக்கு இதய வடிவிலான எமோஜி அனுப்பினால் சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கும் புதிய சட்டத்தை சவூதி மற் றும் குவைத் அரசுகள் இயற்றியுள் ளன. காதலர்கள், தம்பதிகள், நண் பர்கள் தங்களுக்குள் அன்பைப் பரிமாறிக் கொள்ள இந்த எமோஜி யைப் பயன்படுத்துவதுண்டு.

இந்த நிலையில், இந்த 'ஹார்ட்' எமோ ஜியை அறிமுகமில்லாத பெண் களுக்கோ அல்லது துஷ்பிரயோகம் செய்யும் நோக்கிலோ அனுப்பினால் சிறைத்தண்டனை விதிக்கப்படும் வகையில் புதிய சட்டம் அங்கு இயற் றப்பட்டுள்ளது.

அதன்படி குவைத்தில் குற்றம் நிரூ பிக்கப்பட்டால், 2 ஆண்டு சிறைத்தண் டனையும், 2 ஆயிரம் தினார் அபரா தமும் விதிக்கப்படும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, குவைத்தின் அண்டை நாடான சவூதியும் 2 முதல் 5 ஆண் டுகள் சிறைத்தண்டனையும், 1 இலட் சம் ரியால் அபராதமும் விதிக்கப்படும் என்று அறிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## விழிப்புணர்வு

ஜே/140 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் மேற்குப் பகுதி மக்களுக்கு டெங்குக் கட்டுப்பாடு மற்றும் போதைப் பாவனையின் தாக்கம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்துரை மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராமஅலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் அண்மையில் வழங்கப்பட்டது.

(ய-66)

## பரிசில் வழங்கல்



வலி. வடக்கு பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது .

(ய-9)

## வாழ்வாதார உதவி



சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு தெற்கு சிலாவத்தை முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கின்ற 10 பெண்களுக்கு கடந்த 12 ஆம் திகதி வாழ்வாதார உதவியாக கருவாடு பதனிடுதல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில் ஒரு நபருக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கருவாடு பதனிடும் பொருள்கள் வழங்கப்பட்டன.

(ய-213)



ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது ஸ்ரீ கண்ணன் அன்னதான மடாலயத்துக்கான அடிக்கல் நாட்டலும் இடம்பெற்றது.

(ய-125)



யாழ். வண்ணை ஸ்ரீவீரகாளிஅம்மன் ஆலயத்தில் கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகிய வருடாந்த மஹோற்சவத்தின் வைரவசாந்தி உற்சவத்தின்போது ஆலயத் தொண்டர்சபையின் நிதிப் பங்களிப்பில் ஆலயச் சூழலுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான காசோலைகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், ஆலயக் குருக்களான சிவதர்சக்குருக்கள், ஹரிதர்சக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான காசோலைகளை வழங்கிவைத்தனர்.

(ய-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்க தொடர்ச்சி

போதிலும், ஸ்ரீலங்கா இனஷூரன்ஸ் தனது சொத்துகள் இருப்பை ரூ. 274.4 பில்லியனாகவும், ஆயுள் நிதியத்தை ரூ. 156.7 பில்லியனாகவும் உயர்த்தியி ருந்தது. இதனூடாக மாபெரும் மற்றும் வலிமையான உள்நாட்டு காப்புறுதி சேவை வழங்குநர் எனும் தனது நிலையை மேலும் வலிமைப்படுத்தியிருந்தது. நிறுவனத்தின் முறையான முதலீட்டு நிர்வாக மூலோபாயங்கள் உறுதி செய்யப்பட்டி ருந்ததுடன், காப்புறுதிதாரர்கள் மற்றும் அவர்களின் நலன் தொடர்பில் ஸ்ரீ லங்கா இனஷூரன்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பு மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நாட்டி லுள்ள காப்புறுதி வழங்குநர் நிதி உறுதிப் பாட்டுக்காக A(lka) ஃபிட்ச் தரப்படுத்தல் மூலமாக உறுதி செய்யப்பட்ட ஒரே காப்புறுதி வழங்குநராகவும் ஸ்ரீலங்கா இன்/ரன்ஸ் திகழ்கின்றது. வாடிக் கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடு என்பது ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் பிரதான மூலோபாய அங்கங்களில் ஒன்றாக அமைந்தி ருப்பதுடன், புதிய சந்தைப் பிரிவுகளை இனங் காணல் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவை களை புரிந்து கொண்டு சகாயமான மற்றும் பொருத்தமான தீர்வுகளை வடிவமைத்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றது. கடந்த ஆண்டு ஸ்ரீலங்கா இனஷூரன்ஸ் அறிமுகம் செய்திருந்த பிரத்தியேகமான காப்புறுதித் திட்டங்களில் ஒன்றாக, 'School Fee Protector' அமைந்திருந்தது. எதிர்பாராதவிதமாக குடும்பத்தின் பிரதான வருமானமீட்டு பவர் உயிரிழந்தால் அல்லது நிரந்தர அங்கவீனமுற்றால், சிறுவர்களின் கல்விசார் செலவீனங்களை பராமரிக்கும் வகையில் அமைந்துள்ளது. தீர்வுகள் மற்றும் செயன்முறை புத்தாக்கங்களில் ஈடுபடுவதற்கு மேலதிகமாக, தனது வாடிக்கையாளர்களுக்காக பல்வேறு பெறுமதி சேர்ப்புகள் தொடர்பிலும் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது. இதன் பெறுபேறாக, 2022 ஆம் ஆண்டில், ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் லைப் லோயல்டி வெகுமதித் (Life Loyalty Rewards) திட்டமொன்றை அறிமுகம் செய்திருந்தது. இதனூடாக, ஸ்ரீ லங்கா இனஷூரன்ஸ் ஆயுள் காப்புறுதிதாரர்களுக்கு பெருமளவு சலுகைகள் மற்றும் அனுகூலங்களை அனுபவிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், காப்புறுதி தவணை காலப்பகுதி முழுவதிலும் வாடிக்கையாளர்களுக்கு உயர் பெறுமதியை அனுபவிப்பதற்கான வசதியும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், கடந்த ஆண்டில், ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் நிறுவனத்தினால் மாதாந்தம் சராசரியாக ரூ. 960 மில்லியன் ஆயுள் காப்புறுதி உரிமம் கோரல் கொடுப்பனவுகளாக வழங்கப்பட்டிருந்தது. அதனூடாக காப்புறுதிதாரர்களுக்கான அதன் உறுதிமொழிறை நிறைவேற்றுவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டிருந ்தது.மேலும், ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஸ்தாபிக்கப்பட்டது முதல், இலங்கை மக்களுக்கு ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வூட்டுவதற்கு அதிகளவு முக்கியத்துவமளிக்கின்றது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும், அனைத்து இலங்கையர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், ஆயுள் காப்புறுதியை பிரபல்யப்படுத்துவதில் தேசிய காப்புறுதி சேவைகள் வழங்குநர் எனும் வகையில் முன்னிலையில் திகழ்கின்றது. நாட்டிலுள்ள முன்னணி காப்புறுதிதாரர் எனும் வகையில், நாட்டினுள் காப்புறுதி கட்டமைப்பை மாற்றியமைப்பதற்காக தொழில்நுட்பத்தை பின்பற்றுவது என்பதில் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு உயர் சேவை அனுபவம் மற்றும் சௌகரியத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், டிஜிட்டல் ஆற்றல்களை மேலும் வலுப்படுத்தி பெறுமதி சேர்க்கும் வகையில் தனது காப்புறுதித் தீர்வுகள் மற்றும் செயன்முறைகளை டிஜிட்டல் ஒருங்கிணைப்பு செய்யும் பணிகளை துரிதப்படுத்தி வருகின்றது. உதாரணமாக, கடந்த ஆண்டு சகல போனஸ் கொடுப்பனவு சான்றிதழ்களும் டிஜிட்டல் தளங்களான SMS, மின்னஞ்சல் மற்றும் SLIC Mobile App ஆகியவற்றினூடாக விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும், தற்கால கேள்விகளை நிறைவேற்றும் வகையில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ், மேலதிக கொடுப்பனவு கேட்வேகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 0% வட்டியில்லாத இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள், எளிமைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் இணைப்பு மற்றும் டிஜிட்டல் கட்டமைப்புகளினூடாக ஒழுங்கமைக்கப்பட்ட காப்புறுதி வழங்கல் மற்றும் உரிமை கோரல்கள் செலுத்தல்கள் போன்றவற்றையும் மேற்கொண்டிருந்தது. வாடிக்கையாளர்களை முன்னிலைப்படுத்தி இயங்குவதில் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பு இதனூடாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அண்மையில், தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாகவும் Brand Finance இனால் "அதிகளவு விரும்பப்படும் காப்புறுதி வர்த்தக நாமம்" எனும் கௌரவிப்பு ஸ்ரீலங்கா இனஷூரன்ஸ்க்கு வழங்கப்பட்டிருந்தது. நாட்டு மக்கள் மத்தியில் ஒரு வர்த்தக நாமமாக ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஏற்படுத்தியுள்ள தாக்கம், சந்தையில் கொண்டுள்ள உறுதியான பிரசன்னம் மற்றும் நாட்டு மக்களின் மீது அதிகளவு அக்கறை கொள்ளக்கூடிய வர்த்தக நாமத்தின் ஆற்றல் போன்றன உறுதி செய்யப்பட்டுள்ளன. 2023 Brand Finance இன் சிறந்த 100 "மிகவும் பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள்" எனும் வரிசையில் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் தொடர்ந்தும் தரப்படுத்தப்பட்டிருந்தது. ரூ. 2.7 பில்லியன் வர்த்தக நாம பெறுமதியுடன், "மிகவும் பெறுமதி வாய்ந்த ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமம்" என்பதில் இரண்டாமிடத்தை ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் பெற்றுக் கொண்டது. மேலும், 2023 இல் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் வர்த்தக நாமம் என்பது Brand Finance இனால் வெளியிடப்பட்ட 'Movers and Shakers மிகவும் பெறுமதி வாய்ந்த நுகர்வோர் வர்த்தக நாமங்கள்" மற்றும் நாட்டிலுள்ள மாபெரும் விற்பனைசார் வர்த்தக நாமங்களுடன் போட்டியிட்டு, இரு ஸ்தானங்கள் முன்னேறி, 34 ஆவது அதிகளவு பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமமாக தரப்படுத்தப்பட்டிருந்தது. சமூகத்தாருக்கு, பிரிவுகளுக்கு வயதுக் குழுக்களுக்கு மற்றும் மாறுபட்ட இணைந்த குழுக்களுக்கு தனது தீர்வுகள் மற்றும் சந்தை முன்னேற்ற செயற்பாடுகளினூடாகவும், நடைமுறைச் சாத்தியமான மற்றும் சகாயமான காப்புறுதித் தீர்வுகளினூடாகவும் பாதுகாப்பளிப்பது தொடர்பான வழிமுறைகளை தொடர்ந்தும் இனங்காணும் நடவடிக்கைகளில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஈடுபட்டுள்ளது. 190 கிளைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் எனும் பரந்த மற்றும் வலிமையான வலையமைப்புடன், 8000 க்கும் அதிகமான ஆலோசகர் வலையமைப்பினூடாக, தேசத்தின் மக்களுக்கு பாதுகாப்பை வழங்கும் காப்புறுதிக் கடப்பாட்டுக்கு அப்பால் சென்று சேவைகள் வழங்கப்படுகின்றது.




2023 Brand Finance இன் சிறந்த 100 "மிகவும் பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள்" எனும் வரிசையில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் தொடர்ந்தும் தரப்படுத்தப்பட்டிருந்தது. ரூ. 2.7 பில்லியன் வர்த்தக நாம பெறுமதியுடன், "மிகவும் பெறுமதி வாய்ந்த ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமம்" என்பதில் இரண்டாமிடத்தை ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் பெற்றுக் கொண்டது. மேலும், 2023 இல் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் வர்த்தக நாமம் என்பது Brand Finance இனால் வெளியிடப்பட்ட 'Movers and Shakers மிகவும் பெறுமதி வாய்ந்த நுகர்வோர் வர்த்தக நாமங்கள்" மற்றும் நாட்டிலுள்ள மாபெரும் விற்பனைசார் வர்த்தக நாமங்களுடன் போட்டியிட்டு, இரு ஸ்தானங்கள் முன்னேறி, 34 ஆவது அதிகளவு பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமமாக தரப்படுத்தப்பட்டிருந்தது. சமூகத்தாருக்கு பிரிவுகளுக்கு வயதுக் குழுக்களுக்கு மற்றும் மாறுபட்ட இணைந்த குழுக்களுக்கு தனது தீர்வுகள் சந்தை முன்னேற்ற செயற்பாடுகளினூடாகவும், நடைமுறைச் சாத்தியமான மற்றும் சகாயமான காப்புறுதித் தீர்வுகளினூடாகவும் பாதுகாப்பளிப்பது தொடர்பான வழிமுறைகளை தொடர்ந்தும் இனங்காணும் நடவடிக்கைகளில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஈடுபட்டுள்ளது. 190 கிளைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் எனும் பரந்த மற்றும் வலிமையான வலையமைப்புடன், 8000 க்கும் அதிகமான ஆலோசகர் வலையமைப்பினூடாக, தேசத்தின் மக்களுக்கு பாதுகாப்பை வழங்கும் காப்புறுதிக் கடப்பாட்டுக்கு அப்பால் சென்று சேவைகள் வழங்கப்படுகின்றது.

## ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் School Fee Protector திட்டத்துடன் உங்கள் பிள்ளைக்கு தடங்கலில்லாத கல்வி

தேசமொன்றின் முன்னேற்றத்துக்கு கல்வி என்பது சிறந்த வழிகாட்டியாக அமைந்திருப்பதுடன், சமூகமொன்றின் முதுகெலும்பாகவும் அமைந்துள்ளது. நாட்டின் எதிர்காலம் இன்றைய சிறுவர்களாக உள்ளதுடன், கல்வியை தொடர்வதற்கான உரிமையை ஒவ்வொரு பிள்ளையும் கொண்டுள்ளது. சரியான கல்வியைப் பெற்ற மக்கள் குழுவினரால், வசிப்பதற்கு உகந்த சிறந்த சமூகம் கட்டியெழுப்பப்படுவதுடன், அதனால், அனைத்து சிறுவர்களுக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை சகல அரசாங்கங்களும் மேற்கொள்ள வேண்டும். அதுபோன்று, சிறுவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்படும் வகையில் சரியான கல்வியைப் பெற்றுக் கொள்வதையும், அதனூடாக நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கக்கூடியவர்களாகவும், சமூகத்தின் நலனில் பங்களிப்பு செலுத்தக்கூடியவர்களாகவும் அவர்களை கட்டியெழுப்பும் பொறுப்பு ஒவ்வொரு பெற்றோரையும் சேரும். இன்றைய சமூகத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் தமது நேரத்தையும் பணத்தையும், தமது சிறுவர்கள் சரியான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு முதலீடு செய்வதை காண முடிகின்றது. சிறுவர்களின் கல்விப் பயணத்தை தொடர்வதற்கு நன்றாக சிந்தித்து மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் அல்லது சிறந்த திட்டங்கள் பெற்றோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் போதிலும், வாழ்க்கை என்பது நிச்சயமற்றது. குடும்பம் எதிர்கொள்ள வேண்டிய எதிர்பாராத துரதிர்ஷ்டவசமான சம்பவங்களும் இடம்பெறலாம். அவ்வாறான எதிர்பாராத சம்பவங்களினால், பெற்றோருக்கு தமது பிள்ளைகள் பயிலும் பாடசாலைகளை மாற்ற வேண்டிய சூழ்நிலை கூட எழலாம். குறிப்பாக, தனியார் அல்லது சர்வதேச பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகளை, தமக்கு சகாயமான கல்வி நிலையங்களுக்கு மாற்ற வேண்டி ஏற்படலாம். எவ்வாறாயினும், எந்தவொரு சூழ்நிலையிலும், ஒரு பிள்ளையின் கல்விக்கு தடங்கல் ஏற்படக்கூடாது. அது அந்தப் பிள்ளையின் வாழ்நாள் முழுவதும் தொடரக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்.



இந்த பிரச்சனைக்கு தீர்வாக, ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் 'School Fee protector' எனும் புத்தாக்கமான தீர்வை அறிமுகம் செய்திருந்தது. குடும்பத்தின் பிரதான வருமானமீட்டுபவர் உயிரிழத்தல் அல்லது நிரந்தர அங்கவீனமடைதல் போன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்களுக்கு முகங்கொடுத்தால், பிள்ளையின் பாடசாலை கட்டணச் செலவுகள் நிவர்த்தி செய்யப்படும். தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கு தடங்கலில்லாத கல்வி வழங்கப்படுவதை உதவுவதற்காக School Fee protector அமைந்துள்ளது. சம்பளத்தை விட பாடசாலை கட்டணங்கள் வேகமாக அதிகரித்த வண்ணமுள்ள நிலையில், இந்தத் திட்டத்தினூடாக, மோசமான சூழ்நிலை களிலும் உங்கள் பிள்ளைக்கு தடங்கலில்லாத கல்வியை தொடர்வதற்கு உத்தரவாதமளிக்கப்படுகின்றது. மேலும், அவ்வாறான துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகளில் பாடசாலை கட்டணங்களை செலுத்த முடியாத நிலை எழுந்தாலும், தமது கல்வி தடங்கலடையும் அல்லது முழுமையாக இடைநின்றுவிடும் என்ற கவலை கொள்ள வேண்டியதில்லை. 18 முதல் 65 வயதுக்குட்பட்ட பெற்றோருக்கு 'School Fee Protector' திட்டத்தை கொள்வனவு செய்ய முடியும். காப்புறுதி தவணை மற்றும் பெறுமதி போன்றவற்றை பாடசாலையில் எஞ்சியிருக்கும் காலப்பகுதியின் அடிப்படையிலும், செலுத்த வேண்டிய பாடசாலைக் கட்டணங்களின் அடிப்படையிலும் பெற்றோர்களால தீர்மானிக்க முடியும். ஒற்றைக் கட்டுப்பண செலுத்தலுடன் முழு காப்புறுதி காலப்பகுதிக்கும் இந்தத் திட்டம் செயலில் இருக்கும். வருடத்தின் எப்பகுதியிலும் கொள்வனவு செய்ய முடியும்.இலங்கையர்களின் மாறி வரும் நுகர்வோர் தேவைகளின் பிரகாரம் தமது சேவைகளையும் தீர்வுகளையும் வழங்குவது தொடர்பில் ஸ்ரீலங்கா இன்/ரன்ஸ் கவனம் செலுத்துகின்றது. புத்தாக்கமான மற்றும் அணுகக் கூடிய காப்புறுதித் தீர்வுகளினூடாக சமூகங்களை பாதுகாத்திடும் முயற்சியை தொடர்ச்சியாக மேற்கொள்கின்றது. நாட்டின் சிறுவர்களை பாதுகாத்து ஊக்குவிப்பதில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் எப்போதும் கவனம் செலுத்துவதுடன், சிறந்த பிரஜைகளாக தமது கனவுகளை பூர்த்தி செய்வதற்கு ஆதரவளிக்கின்றது. அந்த முயற்சிகளில் ஒன்றாக School Fee Protector என்பதும் அமைந்துள்ளது.

## ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் Freedom திட்டங்களுடன் கவலையின்றி பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரான வாழ்க்கையை அனுபவியுங்கள்

வயது முதிரவடைவது என்பதை தடுக்கமுடியாது. ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளில் அனுபவிக்கும் இயற்கையான வாழ்க்கை சக்கரத்தின் ஒரு கட்டமாக இது அமைந்துள்ளது. வாழ்க்கையில் பல கட்டங்களை கடந்த பின்னர், பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரான வாழ்க்கை என்பது, தமது வாழ்நாளில் அனுபவிக்கக்கூடிய இறுதிக் கால கட்டமாக அமைந்திருக்கும். இந்த காலகட்டம் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதில், அதற்காக தமது இள வயதில் நிலையான வருமானத்தைக் கொண்டிருந்த போது எவ்வாறு திட்டமிட்டிருந்தார் என்பது தாக்கம் செலுத்தும்.

மகிழ்ச்சிகரமான ஓய்வூதிய காலம் என்பது பல காரணிகளில் தங்கியிருக்கும். இதில் சிறந்த ஆரோக்கியம், ஆரோக்கியமான உணவு பழக்கங்கள், உடல் தகைமையை பேணல் மற்றும் மிக முக்கியமாக, நபர் ஒருவர் தம்மை வேலைப்பளுவுடன் பேணக்கூடிய திறனைக் கொண்டிருப்பது போன்றன பங்களிப்புச் செலுத்தும். இவை அனைத்தையும் கொண்டிருப்பதற்கு, நிலையான வருமான மூலத்தைக் கொண்டிருப்பது கண்டிப்பானதாகும். மேலும், ஓய்வூதியம் பெறும் வயதை எய்தியதும், மருத்துவ அவசர நிலைகள் தவிர்க்க முடியாதவை. எனவே, குடும்பத்துக்கு சுமையை ஏற்படுத்தாது, ஆயத்தமாக இருப்பது கட்டாயமானதாகும். மேலும், ஓய்வு பெறும் முன்னர், அவ்வாறான வாழ்க்கைக்கு தம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திடீரென கைவிடப்பட்டதாக உணர்வது என்பது இனிய அனுபவத்தை வழங்காது.

அனைவருக்கும் ஓய்வூதியம் பெறும் காலத்தின் சுதந்திரத்தை எவ்வித கவலையுமின்றி அனுபவிக்கும் விருப்பம் உள்ளது. குறிப்பாக, கடினமான உழைத்து மற்றும் பெருமளவு குடும்ப கடப்பாடுகளை நிவர்த்தி செய்து ஓய்வு பெற்றதன் பின்னர் அவ்வாறான உணர்வு எழும். பணம், மருத்துவ செலவுகள் மற்றும் வாழ்க்கைமுறை சீராக்கங்கள் போன்றன தொடர்பில் கரிசனைகள் காணப்பட்டால், நபரால் ஓய்வூதியம் பெறும் காலத்தின் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது. எனவே, அனைவரும் தமது ஓய்வூதியம் பெறும் காலம் தொடர்பில் முன்கூட்டியே திட்டமிட்டு, அதற்காக முதலீடு செய்வது கண்டிப்பானதாகும்.

வெவ்வேறான ஓய்வூதிய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு, சந்தையில் பல ஓய்வூதியத் திட்டங்கள் காணப்படுகின்றன. முதலீட்டின் முக்கியத்துவம் காரணமாக, தமது தேவைகள் தொடர்பில் நுகர்வோர் ஒருவர் அதிகம் கவனம் செலுத்தி, காப்புறுதித் திட்டமொன்றை கொள்வனவு செய்வதற்கு முன்னர் தமக்கு காணப்படும் தெரிவுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் மூன்று பிரதான ஓய்வூதியத் திட்டங்களை Freedom எனும் நாமத்தில் வழங்குகின்றது. Freedom Retirement Plan, Freedom Single Premium Plan மற்றும் Freedom Lifestyle Plus போன்றன அவையாகும். இந்தத் திட்டத்தின் நாமத்தைப் போலவே, இந்த ஓய்வூதியத் திட்டங்களின் இலக்கு என்பது சுதந்திரத்தை வழங்குவதாகும். மாதாந்த வருமானத்தை காப்புறுதிதாரர்களுக்கு பெற்றுக்கொடுத்து, நிதிச் சுதந்திரத்தை கொண்டிருப்பதுடன், தமது மாதாந்த ஓய்வூதியத் தொகையை போன்று ஐந்து மடங்கை வருடாந்த சுகாதார பராமரிப்பு அனுகூல உரிமைகோரலாக பெற்றுக்கொள்ளும் அனுகூலம் வழங்கப்படுகின்றது. இதற்காக, வைத்தியசாலை அல்லது மருத்துவ கட்டணப் பட்டியலகளை சமர்ப்பிக்க வேண்டியதில்லை.



அத்துடன், மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு அனுகூலம் வருடாந்தம் 5% இனால் திரண்ட வட்டியின் அடிப்படையில் அதிகரிக்கின்றது. மேலும், ஓய்வூதியத்திட்டத்தின் பிரகாரம், பாரதூர நோய்களுக்கான காப்பீடு, வைத்தியசாலை அனுமதி காப்பீடு, விபத்தினால் ஏற்படும் நீடித்த நிரந்தர அங்கவீன அனுகூலம், குடும்ப பாதுகாப்பு அனுகூலங்கள் மற்றும் பல அனுகூலங்கள் வழங்கப்படுகின்றன.

காப்புறுதி ஒப்பந்ததாரரின் நிதிச் சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்கு மேலதிகமாக, ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் Freedom ஓய்வூதியத் திட்டங்களில் முதலீடு செய்வதனூடாக காப்புறுதிதாரர்களுக்கு தமது ஓய்வூதியம் பெறும் காலத்தை கவலையின்றி அனுபவிக்க முடியும். சுகாதார பராமரிப்பு அனுகூலங்களை பெற்றுக் கொள்ளும் தகைமையை கொண்டிருப்பதுடன், ஓய்வு பெறுவதற்கு முன்னர் கொண்டிருந்த வாழ்க்கை முறையை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டியதில்லை.

அனைவருக்கும் காப்புறுதி வழங்குவது எனும் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கொள்கையின் பிரகாரம், நாட்டின் அனைத்து சந்தைப் பிரிவுகளுக்கும் சேவைகளை பெற்றுக் கொடுப்பதையும், அவர்களின் பாதுகாப்பு தேவைகளை நிவர்த்தி செய்வதையும் முன்னுரிமையாகக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறைச்சாலை அதிகாரி மீது தாக்குதல்

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிகம பஸ் நிலையத்துக்கு அருகில் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை தனது கடமையை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதிகாரி வீடு நோக்கி பஸ்ஸில் பயணித்தபோது அதில் ஏறிய 5 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது. அதில் காயமடைந்த சிறைச்சாலை அதிகாரி மாத்தறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான அதிகாரி கடந்த 4ஆம் திகதி மாத்தறை சிறைச்சாலையிலிருந்து இடமாற்றம் பெற்று, காலி சிறைச்சாலைக்குக் கடமைக்காக நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## கைது

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ். நகரப்பகுதியிலுள்ள மின்உபகரண திருத்தகத்தில் உபகரணங்களைத் திருடிய சந்தேகநபரை பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர். கடந்தமாதம் 26 ஆம் திகதி திருத்தகத்திலிருந்த இரண்டு குளிர்சாதனப்பெட்டிகளின் வாயுநிரப்பி, இரண்டு மின்சார மோட்டர்கள் என ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது. முஸ்லிம் கல்லூரி வீதி ஓட்டுமடத்திலுள்ள வீடொன்றிலிருந்து சந்தேகநபரை நேற்றுக் கைது செய்த பொலிஸார் அவரிடமிருந்து திருடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர். (அ-ஒ.125)


## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 08 • 02 • 1946



விண்ணில் 03 • 08 • 2023

**அந்தோனிப்பிள்ளை பிலிப் (சின்ராசா)**

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் **திருமதி அல்போன்ஸ் லக்ஸ்மாலா** அவர்களின் அன்புத் தந்தையின் இறப்பில் துயர்பகிர்வதுடன் அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ.க.ம.வி.

(cs 46043) (n.1)

## கண்ணீர் அஞ்சலி



எமது சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதி சந்தைப்படுத்தல் முகாமையாளர்

**திரு.வி. சண்முகநாதன்**

அவர்களின் பாசமிகு தந்தை

**இராசக்கோன் விவேகானந்தர்**

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

அவர்கள் நேற்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளரும்**
**சக ஊழியர்களும்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**வட பிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்.**

(CS 25867)A-1

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 08 • 11 • 1937



மறைவு 04 • 08 • 2023

**திரு. செல்லத்துரை சோமசுந்தரம்**

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் **திருமதி ஞானாம்பிகை கமலநாதன்** அவர்களின் அன்புத் தந்தையின் இறப்பில் துயர்பகிர்வதுடன் அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ.க.ம.வி.

## மரண அறிவித்தல்

### லோகேஸ்வரி ஸ்ரீஸ்கந்தா

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய லோகேஸ்வரி ஸ்ரீஸ்கந்தா கடந்த (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி துரைசிங்கம் தம்பதியரின் அன்பு மகளும், ஸ்ரீஸ்கந்தாவின் அன்பு மனைவியும், திருச்செல்வம் இரத்தினம்மா தம்பதியரின் மருமகளும், மாலதி - சுப்பிரமணியம், ரதி-சந்திரநாதன், ஸ்ரீதரன் செல்வக்குமார், கௌரி -உதயகுமார், ரேவதி -தேவன், ஜெயந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2023) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களிற்கு அறியத்தருகின்றோம்.

**முதலிகோயிலடி,**
**கொக்குவில் மேற்கு.**

**தகவல்:**
**மைத்துனி - ரதி சந்திரநாதன்**
**077 928 9037**
**021 205 2770**

(cs 51544) (N -1)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

## நல்லூர் உற்சவகாலத்தில் CCTV கமராக்களை வாடகைக்கு பொருத்துவதற்கான கேள்வி கோரல் - 2023

நல்லூர் உற்சவகாலத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை சுற்றியுள்ள நான்கு பக்க வீதிகளில் 32 CCTV(5MP) கமராக்களைக் கொண்ட கமராத் தொகுதியினை வாடகை அடிப்படையில் பொருத்துவதற்கு எமது சபை தீர்மானித்துள்ளது.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 07.08.2023 – 14.08.2023ஆம் திகதிவரை சபையின் கொள்வனவுப்பகுதியுடன் தொடர்பு கொண்டு கேள்விகளுக்குரிய கூறுவிலைப் படிவங்களினைப் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 14.08.2023ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபாலிலோ, நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**கேள்வி திறக்கும் திகதி: 14.08.2023. நேரம்: முற்பகல் 11.00 மணி.**

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**
07.08.2023.

(cr 40359 N - 1)

## மரண அறிவித்தல்

மண்ணில் 22 • 08 • 1930



விண்ணில் 05 • 08 • 2023

**அன்னலட்சுமி எவேட்ஸ் (Muththu Aunty)**

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் 160 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி எவேட்ஸ் அவர்கள் கடந்த (05.08.2023) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோர்ஜ் எவேட்ஸ் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற பூதத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஜெயவீரசிங்கம், ஜெயமணி, தனபாலசிங்கம், குலராஜசிங்கம், ஜெயலட்சுமி (பவளம்), பரராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும், லலிதா (USA), ஆனந்தராஜன் (Colombo), சந்திரவதனா (Canada), நாளினி (ஓய்வுபெற்ற ஊழியர், Bank of Ceylon - Jaffna), காலஞ்சென்ற ரவிராஜ் மற்றும் சித்திராணி (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சத்தியநாதன், காந்தி எவேட்ஸ் மற்றும் முருகேசு பிள்ளை (Canada), தேவானந்தன் (ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்), மோகான் (UK) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருஷாந்தி, வேதன், நிலாந்தி, வோான் (USA) சுரத், ரொஜி, சுரேஸ், கிருஷாணி (NZ), ருக்ஸ்சி, திமோத்தி (Canada), காலஞ்சென்ற டிலுக்சி மற்றும் பால்ராஜ் (UK), ரவீன் (MAS Kreeda Vaanavil), லின்டா, லக்ஷிதா (ஆசிரியர், வேலணை மத்திய கல்லூரி), ருபேஸ் (First Accounting Solution) ஆகியோரின் பேர்த்தியாரும், Sebastian, Arianne, Gideon (USA), Eric, Marissa (USA), Caleb, Kaitlyn (Canada), Ryan, Clara (UK), Joel ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் White House மலர்ச்சாலையில் இன்று (07.08.2023) காலை 10.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரையும் அதன்பின்னர் பிற்பகல் 4.00 மணிமுதல் பிற்பகல் 6.00 மணி வரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (08.08.2023) செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**160, பழைய பூங்கா வீதி,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 610 4805, 077 5632 759**

(CS 25866) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் வீரசிங்க மண்டபத்தில்

**இன்றும் நாளையும்**

**ஆடி மாத ஆடை தள்ளுபடி**

**ஆண்கள் மற்றும் பெண்களுக்கான**

**தலை சிறந்த ஆடைகள்**



டொப் 500/=

ரெடிமேட் சல்வார் 750/=

திருமணப்பட்டுச் சாறிகள்

கொட்டன் சாறிகள்

சல்வார்கள்

சல்வார் துணிகள்

புத்தம் புது டொப் வகைகள்

மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடை தெரிவுகள்.....

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

**இந்தியன் செலக்ஷன்**


காலம்: ஆவணி 07, 08

இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)


## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 05 . 1936



மறைவு 06 . 08 . 2023

# இராசக்கோன் விவேகானந்தர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சரசாலையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசக்கோன் விவேகானந்தர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (06.08.2023) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசக்கோன் தெய்வநாயகி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஞானாம்பிகை அவர்களின் பாசமிகு கணவரும், சண்முகநாதன் (பிரதி சந்தைப்படுத்தல் முகாமையாளர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்), குகநாதன் (சுவிஸ்), வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், யசோதை, புஷ்பகாந்தி (சுவிஸ்), நந்தகுமார் (வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் சின்னத்தம்பி (கனடா), சாந்தநாயகி, மனோன்மணி, சதாபக்தி (கனடா), காலஞ்சென்ற யோகானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற குமரகுரு, செந்திநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கஜானன், வைஷாலினி, கஜேந்திரன், வதனி, யோகாஷினி, சுருதி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2023) திங்கட்கிழமை 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**220/12, தச்சன்தோட்டம்,**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**077 414 7482**
**077 514 3940**

**தகவல்: குடும்பத்தினர்**

(cr40368) (N.1)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி அருளையா



யாழ்ப்பாணம் இல.100, நாவலர் வீதியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி அருளையா அவர்கள் கடந்த (05.08.2023) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற தம்பையா அருளையா (ஹொரணை அருளன்ஸ், சாறி எம்போறியம், மானல் இன்டஸ்ரீஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் நல்லதம்பி (நகைக்கடை உரிமையாளர்), சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், தம்பையா, தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ரோகிணி வதனி (கொ/ விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம்-வயலின் ஆசிரியை), துஷ்யந்தி (லண்டன்), ராகவன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், யசோதரன் (ஆசிரியர், கிங்ஸ்ரன் சர்வதேசப் பாடசாலை முகத்துவாரம்), தர்மராசா (லண்டன்), சரண்யா (Software Architect) ஆகியோரின் மாமியாரும் அக்ஷயன், ஹரிஷா, ஆகியோரின் பேத்தியும், கமலாம்பிகை, மகேஸ்வரி, ஆறுமுகம், இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பரஞ்சோதி, துரைராஜா, அன்னலட்சுமி, ஸ்ரீஸ்கந்தராஜா, கணேசன், செல்வராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (08.08.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 6012314, 077 6231045**

(CS 51548) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 08 . 02 . 1946



விண்ணில் 03 . 08 . 2023

### அந்தோனிப்பிள்ளை பிலிப் (சின்ராசா)

**(லக்ஸ்மாலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

குருநகரை பிறப்பிடமாகவும் பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிலிப் (சின்ராசா) அவர்கள் கடந்த (03.08.2023) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிரபு திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரான்சிஸ்கா (அன்னமலர்) அவர்களின் பாசமிகு கணவரும், லக்ஸ்மாலா (ஆசிரியர் - யா/ பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ.க.ம.வித்தியாலயம்), பிறியோலா (கனடா), றொபினா றெனோலா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை), றெக்சலா (ஆசிரியர், யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அல்போன்ஸ் (உள்ளூராட்சி உதவியாளர், உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம்), றாஜ்குமார் (கனடா), பெலிக்ஸ் (சிசில் மல்டி வேர்க் ஷொப், முல்லைத்தீவு), ஜெயக்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெலா, லக்ஷிகன், வலன்ரீனா, அன்றீனா, ஜோயல், தரணிகா, ஜெஷானா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான லில்லி, சேவியர் மற்றும் ஜேம்ஸ், றோஸ், காலஞ்சென்ற ஜோசெப் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அலோசியஸ், நவமணி மற்றும் நாகம்மா, காலஞ்சென்ற தவரெட்ணம் மற்றும் ராணி, செபஸ்ரீனா காலஞ்சென்ற றொபேட் ஆகியோரின் மைத்துனரும், உதயகாந்தராஜா, பிறேமா ஆகியோரின் சகலரும், அலெக்சாண்டர், ராணி, பபி, Dr.திருமாறன், றதிமதி, Dr.மதிமாறன், Dr.டீன் ஜெனிபேட், டீன் ஒஸ்பேட், சாந்தனா, ஏஞ்சலின் ஆகியோரின் மாமனாரும், ராஜன், காலஞ்சென்றவர்களான நிர்மலா, பாபு மற்றும் கலா, ஜொய்லா, கொன்சி, மேசி, ஜோன்சன், ஜொய்சி, யான்சி, சபினா ஆகியோரின் சிறிய தந்தையும், ரவி, ஜீன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (07.08.2023) திங்கட்கிழமை பி.ப 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.50, 3ம் குறுக்குத்தெரு,**
**பாசையூர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 25852) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாயிரம் கோடி நட்டத்தில் மத்தள

## கணக்காய்வில் தகவல்

கொழும்பு, ஓக. 7

மத்தள சர்வதேச விமான நிலையம் 2017 முதல் 2022 வரையிலான 5 ஆண்டுகளில் 4 ஆயிரத்து 281 கோடி ரூபா நட்டமடைந்துள்ளது. அதிகபட்சமாகக் கடந்த ஆண்டிலேயே 2 ஆயிரத்து 221 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

தேசியக் கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் விமான நிலையத்தின் செயற்பாட்டுச் செலவு 203 கோடி ரூபா. இது அதன் இயக்க வருமானத்தைவிட 26 மடங்கு அதிகம். மத்தள விமான நிலையத்தின் கடந்த ஆண்டுக்கான வரிக்குப் பிந்திய நட்டம் 2 ஆயிரத்து 221 கோடி ரூபா. மத்தள விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 3 ஆயிரத்து 656 கோடி ரூபா செலவிடப்பட்டது. அதற்காகப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகை ஆயிரத்து 900 கோடி ரூபாவாகும். விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் பெற்ற வெளிநாட்டுக் கடனுக்காகக் கடந்த ஆண்டு 184 கோடி ரூபா கடன் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அந்தக் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சுற்றிவளைப்பில் சிக்கிய

# ரூ. 50 கோடி ரூபா பெறுமதியான பாவனைக்குதவாத பொருள்கள்!

கொழும்பு, ஓக. 7

50 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நுகர்வுக்கு பொருத்தமற்ற அரிசி, கோதுமைமா உள்ளிட்ட உணவுப் பொருள்களுடன் களஞ்சியசாலையொன்று நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சுற்றிவளைக்கப்பட்டது.

வத்தளை, ஹெந்தலையில் உள்ள களஞ்சியசாலை ஒன்றில் இறக்குமதி செய்யப்பட்ட மனித பாவனைக்கு பொருந்தாத சுமார் 80 ஆயிரம் ரின் மீன்கள் மீள் பொதி செய்யப்பட்டு சந்தைக்கு விநியோகம் செய்யப்படவுள்ளன என்று கிடைத்த தகவலுக்கு அமைவாக இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்களின் மாதிரிகளை எடுத்து பரிசோதனைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்ததுடன் அந்தக் களஞ்சியசாலையை தற்காலிகமாக மூடுவதற்கும் நடவடிக்கை எடுத்தனர்.

இவை அனைத்தும் கொழும்பு, நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானவை எனத் தெரியவந்துள்ளது.

களஞ்சியசாலையிலுள்ள உணவுப் பொருள்களின் பெறுமதி 50 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்றும், இது வரையில் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சோதனை நடவடிக்கை இது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# நாமலிடம் பணம் கொள்ளை தந்தையும், மகனும் கைது!



கொழும்பு, ஓக. 7

ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் நாமல் குமாரவை தாக்கி அவரிடமிருந்து 60 ஆயிரம் ரூபா மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் தந்தை மற்றும் மகன் ஆகியோர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

நாமல் குமாரவின் மனைவி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகத்தின்பேரில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)


## வீடு வாடகைக்கு

மணற்தறை லேன் 44/10, யாழ்ப்பாணத்தில் 9 அறைகளுடன் 2 மாடி நவீன வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு.

076 221 6387, 077 104 1606

## சாரதி தேவை


லோடர் சாரதி தேவை.



தொடர்பு: சிற்றி ஹாட்வெயார் அன் சன்ஸ்
இல.55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

தோற்றம் • 16 • 10 • 1957



மறைவு • 04 • 08 • 2023

### திரு. கந்தையா குணசேகரம் (கற்கண்டு)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா குணசேகரம் (கற்கண்டு) கடந்த (04.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை கந்தையா மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கமலேஸ்வரியின் பாசமிகு கணவரும், யோகராணி (பிரான்ஸ்), வசந்தராணி (கனடா), ஞானசேகரம் (கனடா), சந்திரசேகரம் (ஜேர்மனி), உதயசேகரம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேன், சாருஜன் (ஜேர்மனி), வசித்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோஜிதா, சோபனா, வினோஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜிதாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி உள்ளிவிராய் தீத்தங்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி மேற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 285 0555

(cs) (N.1)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மாலினி பாஸ்கரன்

B.Com (SL), PGD in English(SL) PDG in Pub Admin, M.A in Public Administration (SL)
(மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

தோற்றம் 04.01.1967
மறைவு 09.08.2020

திதி: ஆடி மாத அபரபக்க சஷ்டி

உள்ளமே தெய்வமம்மா - உம்
உறைவிடம் கோயிலம்மா
இல்லையே இன்று தெய்வம்
இருந்து தாம் எம்மை விட்டு
சென்றதோ மூன்று ஆண்டு?
சென்றதாய்த் தோன்றவில்லை...

மாலினி ! எம்முன் நின்று
மறைந்து நீ ஆண்டு மூன்று
சென்றதாய் இல்லையம்மா
சேர்ந்தெம துள்ளே நின்று
சிந்திடும் சிரிப்பைப் பேச்சை
சிறந்த எம் உறவை நாங்கள்
இன்றதாய் உணருகின்றோம்
இருக்கிறாய் என்றும் எம்முன்...

உருவமே மறைந்ததம்மா - உம்
உள்ளமோ எம்முன் நின்று
பலவகை வழிகள் சொல்லி
பக்குவக் கதைகள் சொல்லி
மனதகை ஆற்றுதம்மா - நீ
மறையலை மகளே எம்முன்
துணையென என்றும் நிற்பாய்
தூங்கிடா நினைவை ஆற்ற
உறவினுள் சேர்ந்து நிற்பாய்
உத்தமி அமைதி கொள்வாய்.....



ஓம் சாந்தி...! சாந்தி!!... சாந்தி!...

50, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 7
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல், கலாசார, சுற்றுலா மற்றும் வரலாற்றுத் துறை மாணவர்களுக்கு நேற்று விசேட கருத்தமர்வு ஒன்று ஜேர்மன் தொல்லியல் நிறுவனத்தால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

குருநாகல், கிரிபாவ கண்ணாடி உருவாக்கத் தொழில்நுட்பம், இந்தியாவின் முசிறி பட்டணம் பற்றிய ஆய்வுகள், இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட ஆய்வுகள், கந்தரோடையில் அண்மையில் ஜேர்மன் தொல்லியல் நிறுவனத்தால் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் மாணவர்களும் இணைந்து முன்னெடுக்கும் அகழ்வாய்வுகள் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் இதில் முன்வைக்கப்பட்டன. (எ-125)

## கொங்கிறீட் கற்களுடன் யாழில் படகு மூழ்கியது

யாழ்ப்பாணம், ஓக. 7
ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் ஆலயத்துறைமுகத்திலிருந்து அனலைதீவுக்கு கொங்கிறீட் கற்களை ஏற்றிச் சென்ற படகு ஒன்று, கடலில் பகுதியளவில் நேற்று மூழ்கியது. படகில் பணிபுரியும் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். படகை மீட்பதற்கான நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது. (அ-ஓ,27)

# யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மறைவு



யாழ்ப்பாணம், ஓக. 7
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் உபதலைவருமான வண. கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார். திடீரென அவருக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளது. அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இருதயநோயாலேயே இறப்பு நிகழ்ந்ததாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 9 வருடங்களாகக் கடமையாற்றி இவ்வருட ஆரம்பத்தில் ஓய்வு பெற்ற நிலையில் நேற்று இயற்கை எய்தினார். (அ-ஓ,27,125)

# கண்வில்லை இறக்குமதி; ரூபா 10 கோடி மோசடி

கொழும்பு, ஓக. 7
இலங்கைக்கு கண்வில்லைகளை இறக்குமதி செய்ததில் 10 கோடி ரூபாவுக்கும் அதிகமாக, முறைகேடு இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கணக்காய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சுமார் ஒரு இலட்சம் கண்வில்லைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் சுமார் 10 கோடி ரூபா நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ அண்மையில் இது தொடர்பில் வெளிப்படுத்தி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கமைய, சுகாதாரச் செயலர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் கண்வில்லைகளை வழங்குவதற்கான விலைமனுக் கோரலுக்குப் பதிலாக, அதிக விலையில் வாங்குவதற்கு சுகாதார அமைச்சின் செயலர் கொள்வனவு குழுவுக்கு விசேட அனுமதியொன்றை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஓ.இ)



## கௌரவிப்பு

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் 25 வருடத்துக்கு மேலாக சிரேஷ்ட ஊடகவியலாளராகவும், யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைநெறியின் பீடத்தின் பேராசிரியராகவும் கடந்த ஏப்ரல் மாதம் 5ஆம் திகதியிலிருந்து பதவி நிலை உயர்வுபெற்றுள்ள யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதியாகக் கடமையாற்றிய சி.ரகுராமுக்கு கடந்த மாதம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நாச்சிமார்கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள தனியார் விடுதியில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், ஊடகத்துறையில் வழிகாட்டுடிக்கும் ரகுராமின் வகிபாகம் எனும் கருப்பொருளில் சிறப்புரை ஆற்றினர். (ய-27)



தேசிய அருங்கலை பேரவையின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் இமையாணன் மேற்கு கைப்பணிச் சங்க பனைசார் உற்பத்தியாளர்களின் கைவினைத் திறனை மேம்படுத்தும் முகமாக கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பனைசார் கைப்பணிச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (ய-125)



கிளிநொச்சி- கல்மடு நாவல் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள புதிய அந்தோனியார் ஆலய திறப்பு விழா கடந்த மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜோசப் ஜெபரட்ணம் அடிகளால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் நடைபெற்று திறந்து வைக்கப்பட்டது. (ய-113)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேராளர் மாநாடு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 7
இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66ஆவது பேராளர் மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்தார். (அ-ஓ,100)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் கதிரன் இராசதுரை



மூன்றாண்டு ஆனதுவோ எம்மைவிட்டு நீரகன்று
எம் நெஞ்சம் மறந்திட மறுக்குதையா
சாவுதனை தழுவிய எம் தெய்வமே
நோவு கொண்டு வேகுதே எம் இதயம்
காவு கொண்ட காலனுக்கு கண்ணும் குருடாச்சோ
பழகிய ஞாபகம் எம்மனதில் பதிந்திருக்க
சிறகுகள் விரித்தே நீர் கூடுவிட்டு பறந்தீரோ
மூன்றாண்டாய் உமை நினைந்து
மாறாத அன்பினொடு மாற்றுவழி ஏதுமின்றி
தேறாமல் நின்று நிதம் தேம்பித் தான்
அழுகின்றோம்
உம் ஆத்மா சாந்தி பெற இறைவனை
வணங்குகிறோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்னை மடியில் 02.08.1953
ஆண்டவன் அடியில் 10.08.2020

திதி: சப்தமி (07.08.2023)

மனைவி
077 170 6482
படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

(CR 40370)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள்வங்கியின் அனுசரணையில் போக்கட்டி அ.த.க. பாடசாலை மாணவர்களின் மாதிரிச்சந்தை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது. (ய-9-159)



புத்தூர் கிழக்கு கருப்பை ஈஸ்வரன் திருவருள்மிகு ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் தேவஸ்தானத்தில் கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது.
நிகழ்வில் குருபூஜையை முன்னிட்டு நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ய)

## குருதிக்கொடை



கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய இளையோர் ஒன்றியமும், கொழும்புத்துறை சென்.றொசாறியன் சனசமூக நிலையமும் இணைந்து காலமான அமரர்களான யேசுதாஸ் சுபீட்சன், ராஜேஸ்கண்ணா டெனிஸ்ராஜ் ஆகியோரின் நினைவுதினத்தை முன்னிட்டு குருதிக் கொடை முகாம் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. (ய-66)



உரும்பிராய் ஸ்ரீ காளி அம்பாள் ஆலய மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா கடந்த 31ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. (ய-66)

## சொற்பொழிவும் நிதி உதவியும்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் உளவளத்துணையாளர் நா.நவராஜ் “திருவாசக இன்பம்” எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.
சிறுநீரகம் பாதிப்புக்குள்ளான வறிய குடும்பங்களைச் சேர்ந்த மூவரின் மருத்துவச் செலவுகளுக்காகத் தலா ஐம்பதாயிரம் ரூபா நிதி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகம் சார்பில் நேரடியாக வழங்கி வைக்கப்பட்டது. (ய-66)



# நல்லூரில் சிறப்பாக நடைபெற்ற யாழ்.மாநகரசபையின் முத்தமிழ் விழா

யாழ். மாநகரசபையின் ஏற்பாட்டில் முத்தமிழ் விழா கடந்த சனிக்கிழமை மாலை நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.
விழாவில் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இயல், இசை, நாடகத் துறைகளில் பெரும் பங்காற்றிய கலாபூஷணம் கோகிலா மகேந்திரன், கலாபூஷணம் எம்.பி.பாலகிருஷ்ணன், கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் ஆகியோர் யாழ். மாநகரசபையின் உயரிய விருதான ‘அரசகேசரி’ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
இயல், இசை, நாடக அரங்குகளாக நிகழ்ந்த நிகழ்வுகளில் ஈழநல்லூர் நாதஸ்வர இளவரசன் பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும், இசை நாட்டிய நாடக அரங்கில் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் ‘வெந்து தணிந்தது காடு’ எனும் நாட்டிய நாடகமும், இயல் அரங்கில் எம் மண்ணில் இன்றைய சூழலில் உயர்கல்வியும், மனிதநேயம், கலாசாரப் பண்பாடுகளும் எனும் தலைப்பில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனை நடுவராகக் கொண்ட பட்டிமன்றமும் நடைபெற்றது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழன்னைக்குப்...

நேரத்தில் சங்கமருவிய கால அற இலக்கியங்கள் மூலம் செய்யப்பட்ட அதே ஆற்றுப்படுத்தலை மீளவும் நிகழ்த்தும் முனைப்போடு இடம்பெற வுள்ள தமிழியல் மாநாட்டுக்கு ஆர்வ முள்ள அனைவரும் திரண்டு வருவது தமிழன்னைக்குச் செய்யும் கௌரவ மாக அமையும் - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன்.

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை யால் நடத்தப்படும் நான்காவது சர்வதேச தமிழியல் மாநாடு 'சமூகக் கட்டுமானத் தில் சங்கமருவிய கால அற இலக்கியங் கள்' என்ற தொனிப்பொருளோடு இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாச பதி கலையரங்கில் இன்றும், நாளையும் தமிழ்த்துறைத் தலைவர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறும் இந்தத் தமி ழியல் மாநாட்டில், சிறப்புரைகள், ஆய்வு கட்டுரைத் தொகுதி வெளியீடு, புலமை யாளர் கௌரவிப்பு, ஆய்வரங்க அமர் வுகள் என்பன முதல் நாள் நிகழ்வாகவும், பாரம்பரிய ஈழத்து அரங்கப் பல்வகை மையும்பயில்முறையும் போன்றன இரண்டாம் நாள் நிகழ்வாகவும் இடம் பெறவுள்ளன. எனவே தமிழின் மீது பேரன்பு கொண்டோரே, உங்கள் தாய் வீடு விழாக்கோலம் பூண்டுள்ளது. தமிழ்ப்பால் ஊட்டிய அன்னை உங் களை அன்போடு அழைக்கிறாள். தாய கமெங்கும் சிதறிக்கிடக்கும் நீங்கள் இந்நன்னாளில் ஒன்றுகூடுங்கள். இரு நாள் அமர்வுகளிலும் பங்கேற்று, தமி ழுக்கும், பாரம்பரியக் கலைகளுக்கும் வலுச்சேருங்கள். வாருங்கள் சேர்ந்து வடம் பிடிப்போம்' என்று தமிழ்த்துறைத் தலைவர் கி.விசாகரூபன் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழியல் மாநாட்டில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறி சற் குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், சென்னைப்பல்கலைக்கழக தமிழ்மொழித்துறைத் தலைவர் பேராசி ரியர் ய.மணிகண்டன் உள்ளிட்ட பல ஆளுமைகள் கலந்துகொள்ளவுள்ள னர். வழமைபோன்று இந்த வருடமும் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை யால் நடத்தப்படும், தமிழியல் மாநாட் டுக்கான நிதிப்பங்களிப்பை சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தினர் வழங்குவது குறிப்பிடத்தக் கது. (அ)

### மனிதக்...

வடக்கைச் சேர்ந்த 7 பேரிடமும் ஐரோப் பாவுக்கு அனுப்பிவைப்பதற்கு ஆட்கடத் தல்காரர்களுக்கு தலா ஐந்து மில்லியன் ரூபா வரையில் வழங்கப்பட்டுள்ளதாக வும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக் பிட்டிய இதுதொடர்பில்குறிப்பிடுகையில், இது வடக்கில் செயற்படும் பரந்த மனித கடத்தல் வலையத்தின் ஒரு பகுதியாகத் தோன்றுகிறது. மேலும் பாக்கு நீரிணை மற்றும் பிற கடல் வழிப் பாதைகளில் கடற்படை மற்றும் கடலோரக் காவல்ப டையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட் டுள்ளனர். இதன் காரணமாக அவர்கள் வான்வழிப் பாதையை தேர்ந்தெடுத்துள் ளனர். எங்களிடம் நன்கு பயிற்சி பெற்ற குடிவரவு எல்லைப் பாதுகாப்பு அதிகாரி கள் உள்ளனர். அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற முயற்சிக்கும் நபர்கள் தொடர்பில் 24 மணிநேரமும் விழிப்பு டன் இருக்கிறார்கள். ஆயினும், ஒருநபர் அல்லது நபர்கள் மீது சந்தேகம் இருந் தாலும், ஒரு முறையான பயணி நாட்டை விட்டு வெளியேறுவதை எங்களால் தடுக் கமுடியாது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சில தவறான அதிகாரிகளின் உடந்தையையும் நிராக ரிக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஓ.இ)

### பாடசாலைகளில்...

ஜயவர்தனபுரவில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு கூறி யுள்ளார்.

'ஒவ்வொரு பாடத் தொகுதியின் முடிவி லும் மதிப்பீடு நடத்தப்பட்டு அதன் புள்ளி கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு வருட இறுதிப் பரீட்சையின் புள்ளிகளு டன் இணைக்கப்படும். வருங்காலத்தில், ஒரு தவணைக்கு ஒரு செயல்நூல் என, மூன்று தவணைகளுக்கான செயல் நூல்கள், மூன்று பகுதிகளாக மாணவர் களுக்கு வழங்கப்படும். இந்தத் திட்ட நடைமுறைப்படுத்தலுடன் தினமும் பாடசாலைக்கு சமுகமளிப்பதும் வகுப்ப றையில் செயற்படுவதும் கட்டாயமாக்கப் படும். எனவே பிரத்தியேக வகுப்பு அல் லது மேலதிக வகுப்புகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் மாணவர்களுக்கு இருக்காது' என அமைச்சர் மேலும் தெரி வித்தார். (அ-ஓ.இ)

### விமான...

விமான எதிர்ப்புக் குண்டுகள் மீட்கப்பட் டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது.

விமான எதிர்ப்புப் பீரங்கிக் குண்டுகள் இரண்டு, ஒரு கைக்குண்டு, ஒரு எல். எம்.ஜி. ரவை, இரண்டு வகையான வெடி பொருள்கள், ஒரு சிறிய துப்பாக்கியின் 17 பாகங்கள், ஒரு டெட்டனேட்டர், இரண்டு வோட்டர் ஜெல் குச்சிகள் மற் றும் பத்து தோட்டாக்கள் அடங்கிய சாரம் ஒன்றையும் கைப்பற்றியதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

இவற்றை எடுத்துச் சென்று தோட்டத்தில் மறைத்து வைத்திருந்தவர்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்திய கரும்புலிகளின் அணி சீதுவ ஊடாகவே ஊடுருவியிருந் தமை குறிப்பிடத்தக்கக்கது. (அ-ஓ.இ)

### சாரதியின்...

முறிந்து வீழ்ந்ததால், அந்தப் பெண் படுகாயமடைந்தார்.

காயமடைந்த பெண் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற் றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த 4 பிள்ளை களின் தாயாரான, மகேஸ்வரன் நவரஞ் சிதம் (வயது - 56) என்பவரே உயிரிழந் துள்ளார்.

ஜூலை 20ஆம்திகதி மீசாலையிலிருந்து சாவகச்சேரி மருத்துவமனைக்குச் செல் வதற்காக பேருந்துக்காக அதிகாலை 5.30 மணியளவில் காத்திருந்துள்ளார். வவுனியாவிலிருந்து வந்த கார் துவிச்சக் கர வண்டியில் பயணித்த முதியவர் மீது மோதி, அதன்பின்னர் அருகில் நின்ற மரத்தின் மீதும் மோதி விபத்துக்கு உள் ளானது. இந்த விபத்தின் போது முறிந்த மரமானது பேருந்துக்காகக் காத்திருந்த பெண்ணின் மீது விழுந்தது.

இந்நிலையில் படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன் தினம் உயிரிழந்தார். கார்ச்சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்கான கார ணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெண்ணின் இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஓ.26.27)

### காற்றாலைகளின்...

மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜய சேகரவுக்கு எதிராக மன்னாரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் நறுவிலிக்குளத்தில் அமைக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை திறப்பதற்காக நேற்று வருகை தந்த மின் சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜய சேகரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் கவனவீர்ப்பு போராட்டம் மதியமளவில் முன்னெடுக்கப்பட்டது.

நறுவிலிக்குளம் மாதர் அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றின் பிரதிநிதிகளும் பெருமளவு இளையோ ரும் பங்கேற்றனர்.

நறுவிலிக்குளத்திலிருந்து அச்சங்குளம் வரை 6 இராட்சத காற்றாடிகள் பொருத்தப் பட்டுள்ளன. அவற்றில் இரண்டு காற்றா லைகள் வீடுகளிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் உள்ளன. காற்றாலைகளிலி ருந்து வரும் சத்தத்தால் இரவு நேரங்க ளில் ஒழுங்காக எம்மால் தூங்க முடிவ தில்லை. மாணவர்கள் படிக்க முடிவ தில்லை. காற்றாலைகள் அமைக்கப்பட் டுள்ள இடங்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களாகவும் கால்நடை களின் தங்குமிடங்களாகவும் முன்பு இருந்தன. அவை தற்போது அழிக்கப் பட்டு உள்ளதால் கால்நடைகளும் பண் ணையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளனர்.

காற்றாலை அமைக்கும்போது எமது அமைப்புகளிடம் எந்தவித பாதிப்புக ளும் ஏற்படாது எனத் தெரிவித்தே சம்ம தம் பெற்றனர். ஆனால், அதற்கு முர ணாக பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதனாலேயே நாம் போராட்டத்தில் ஈடு படுகின்றோம் என்று பொதுமக்கள் தெரி வித்தனர். (அ-ஓ.60.213)

### உடவளவ...

விவசாய சம்மேளனத்தின் செயலர் முத்து சிவமோகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'69 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த கோத்தபய ராஜ பக்ச அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கில் விவசாயத்தின் மீது கை வைத்தது. இர சாயனப் பசளைக்குத் தடை விதித்தது. தரமற்ற பசளைகளை இறக்குமதி செய் தது. விவசாய அமைச்சின் செயலர்க ளாக 7 பேர் மாற்றப்பட்டிருந்தனர். இத னால் அந்த அரசாங்கம் வீட்டுக்கு அனுப் பப்பட்டது. இப்போது ரணில் அரசாங்க மும் அவ்வாறுதான் செயற்படுகின்றது. உடவளவை விவசாயிகளுக்கு நீரைத் திறக்காது தடுத்துள்ளது. 30 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. உட னடியாக அவர்களின் பயிர்ச்செய்கைக்கு நீரைத் திறந்துவிடவேண்டும்' - என்றார்.

இதேவேளை - வட்டக்கச்சி கமக்கார அமைப்பின் செயலர் இ.இளங்குமரன் நேற்றுமுன்தினம் உடவளவ விவசாயி களுக்காகக் குரல் கொடுத்திருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.113)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில்
06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

### நிலப்பரப்பு

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 8147 389
077 9865 457

(CS 25658) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உதயன்' ஊடக அனுசரணையில்

# சுழிபுரம் றைனோஸின் மென்பந்து கிரிக்கெட் லீக்

## சீருடையும் அறிமுகம்



யாழ்ப்பாணம், ஓக. 7

'உதயன்' பத்திரிகையின் ஊடக அனுசரணையுடன் சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகத்தால் மிகப்பிரமாண்டமாக நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியின் வீரர்களுக்கான சீருடை மற்றும் கிண்ண அறிமுகம் என்பன வட்டு வை.எம்.எச்.ஏ. மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4:30 மணியளவில் சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எஸ். உதயராஜ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத்தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் சார்பில் அவரது பிரதிநிதியாக பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவருமான ச. ஜெயந்தன் பங்கேற்றார். அவருடன் லக்கி போன் சொப் உரிமையாளர் லக்சானந்தன், அருள் மோட்டோர்ஸ் உரிமையாளர் அருள், சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழக நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தச் சுற்றுப்போட்டியானது சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேசத்தின் வீரர்களை மையமாகக் கொண்டு நடத்தப்படுவதோடு எட்டு அணிகள் பங்குபற்றுகின்றன.

சங்கானை டொமினேற்றர்ஸ், நிச்சாமம் ஞானவைரவர், கொக்குவில் ஸ்ரார், ஆனைக்கோட்டை றாவன் றைடர்ஸ், ஸ்ரார் போய்ஸ், வராகி சூப்பர் கிங்ஸ், பொன்டி போய்ஸ், கூல் போய்ஸ் ஆகிய அணிகள் பங்கு கொள்கின்றன.

வீரர்களை ஊக்குவிக்குமுகமாக வீரர்களுக்கான ஏலத்தொகை வழங்கப்பட்டு சுற்று போட்டி நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 12ஆம் திகதி முதல் சுற்றுத் தொடர் ஆரம்பமாகி அடுத்த மாதம் 3ஆம் திகதி மாபெரும் இறுதி ஆட்டம் நடைபெறவுள்ளது. ஆட்டங்கள் வட்டுக்கோட்டை வை.எம்.எச்.ஏ. மைதானத்தில் நடைபெறவுள்ளன.

(அ-ஓ.125)

# பறாளாய் முருகன் வர்த்தமானியை மீளப்பெற ஜனாதிபதிக்கு கடிதம்

## தமிழ்த் தேசியக் கூட்டணி அனுப்பவுள்ளது

யாழ்ப்பாணம், ஓக. 7

ஜனாதிபதி ரணில் பதவியேற்ற பின்னர் நடைபெற்ற சிங்கள ஆக்கிரமிப்பு, மத ஆக்கிரமிப்புச் சம்பவங்களைப் பட்டியலிட்டும், பறாளாய் முருகன் கோயில் அரச மரத்தை உரிமை கோரும் முறையற்ற வர்த்தமானி உள்ளிட்ட தமிழர்களின் தொல்லியல் சின்னங்களை அபகரிக்கும் வர்த்தமானிகளை மீளப்பெற வலியுறுத்தியும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலர் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்திருந்தார். 13 ஆவது திருத்தம் தொடர்பில் ரெலோ, புளொட் என்பன தனித்தனியாக யோசனைகளை சமர்ப்பிக்காமல், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 கட்சிகளுடனும் கலந்துரையாடி, கடிதம் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி நேற்று மு.ப. 10 மணியளவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இணைய வழியில் நடைபெற்றது.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அபிப்பிராயத்தை ஜனாதிபதி கோரியுள்ளதால், அது தொடர்பில் மட்டும் குறிப்பிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. காணி, பொலிஸ், நிதி, நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களுடனும் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தவேண்டும் என ஜனாதிபதிக்கு கடிதம் சமர்ப்பிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (அ-ஓ.இ)


**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர் தேவை. (பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.

077 172 3554




# மன்னார் காற்றாலை மின்உற்பத்தி தேசிய நீரோட்டத்துடன் இணைப்பு

மன்னார், ஓக. 7

மன்னாரில் இரண்டாம் கட்டமாக நறுவலிக்குளத்திலிருந்து அச்சங்குளம் வரை கடற்கரையோரப் பகுதியில் அமைக்கப்பட்ட 6 காற்றாலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் 15 மெகாவாட்ஸ் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் நேற்று இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சர் காஞ்சன பங்கேற்றார்.

(அ-ஓ.60,213)


**வீடு வாடகைக்கு தேவை**

அரச உத்தியோகத்தர், சிறிய குடும்பம் (4) யாழ்நகரில் இருந்து 7 km சுற்றுவட்டத்தில் வீடு தேவை.

T.P.: 077 728 3692


# 54 கிலோ கஞ்சா காங்கேசனில் மீட்பு

காங்கேசன்துறை கடற்பரப்பில் நேற்று 54 கிலோ 300 கிராம் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. படகுடன் சந்தேக நபர் ஒருவர் கைதாகியுள்ள நிலையில் இருவர் தப்பியோடியுள்ளனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களுக்கு அமைவாக படகுடன் 54 கிலோ கஞ்சாவையும் கிளிநொச்சி, தர்மபுரத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞனையும் நேற்றுக் கைது செய்துள்ளனர். அவரை காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். இந்தியாவிலிருந்தே கஞ்சா கடத்தி வரப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஓ.125)




**A/L வரலாறு**

உங்கள் ஆசிரியர் - M. பத்மன்

B.A (Hons) History Special, M.A (History) - P.G.D.E, M.E.D (r)

மாவட்ட தேசிய சாதனைமிக்க பெறுபேறுகளை உருவாக்கும் உங்கள் ஆசிரியரிடம் கற்க

• D.M.I • Bitsmans • உயர்கலைக் கல்லூரி

• யாழ்நகர் • மானிப்பாய் • குளப்பிட்டி

A/L 2024, A/L 2025, A/L 2023 அனுமதிகள் வழங்கப்படுகின்றன

தொடர்புகளுக்கு: 077 482 5587



**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் கல்வியங்காடு 21 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு
* புதிய செம்மணி வீதி.
* 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்.

தொடர்புகளுக்கு:

076 788 0591

(CS 25774B) A-1


### தென்னையிலிருந்து...

கரை வீதியைச் சேர்ந்த குணராசா ஞானரூபன் (வயது - 46) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஓ-113)

### மின்சாரத்தை...

படுத்தவேண்டும் என மின்சாரசபை கோரியுள்ளது.

தற்போது மாலை 6 மணி முதல் 8 மணி வரை தினசரி மின்சாரத் தேவை அதிகமாக உள்ளதாகவும் அந்தக்காலப்பகுதியில் அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் மின்சாரத்தைப் பயன்படுத்தினால் தடைகளைக் குறைத்து மின்சாரத்தை வழங்கமுடியும் எனவும் இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

(அ-ஓ.இ)

### விகாரைக்கு...

பிரதேச மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

(அ-ஓ.இ)


**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் புத்தூர் மெயின் றோட்டில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்.
* குடியிருப்பு சூழ உள்ள காணி
* நன்னீர் ஊற்று
* 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

தொடர்புகளுக்கு: 076 057 0354
076 826 0354

(CS 25774) A-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org